# பாட்டாளி சிந்தனை

Volume 24 No. 3

November 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


# நீதித்துறை தனது வரம்பை மீறும் செயல்பாடுகளில் பொதிந்துள்ள அபாயங்கள்

சட்டமன்றமும், (Legislature) நிர்வாகம் அல்லது அதிகார அமைப்பும் மற்றும் நீதித்துறையும் பூர்ஷ்வா ஜனநாயக அரசுகளில், முக்கியமான மூன்று அங்கங் களாக கருதப்படுகின்றன. அவை அரசு செயல் படுவதற்கு உதவுவதோடு அரசை, அதாவது ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களை பாதுகாக் கின்றன. ஜனநாயக அரசில் பாராளுமன்றங்கள் நிறைவேற்றி வெளிப்படையாக அறிவித்த சட்டங் களை அலசி ஆராய்ந்து அமல்படுத்துவதன் மூலமாக அரசிலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாகவும் அதற்கு சரியாக விளக்கம் கொடுப்பதாகவும் நீதித் துறை செயல்பட வேண்டும். மேலும், தாவாக்களைத் தீர்த்துவைப்பது, அதாவது அரசுக்கும் தனிநபர் களுக்கும், தனிநபர்களுக்கிடையிலும், அரசிற்குள் ளேயே இருக்கும் அரசாங்கத்தின் பல்வேறு மட்டங் களிடையே உருவாகும் தாவாக்களையும் 'சட்டத்தின் கீழ் சமமான நீதி' என்ற கோட்பாட்டின் அடிப் படையில் நீதித்துறை தீர்த்து வைக்க வேண்டும். அரசின் மற்ற இரண்டு அங்கங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையையும் சட்டப்படியும் அரசியலமைப்பின்படியும் சரியா என்று சரிபார்க்க வேண்டும். இவையனைத்தும் ஒரு சுதந்திரமான ஜனநாயக அரசில் நீதித்துறையின் முக்கியமான கடமைகளாகக் கருதப்படுகின்றன.

பூர்ஷ்வாக்கள் தங்களது ஜனநாயக அமைப்பை வளர்த்தெடுத்த தருணத்திலேயே ஒவ்வொரு அங்கத் திற்குமான ஒப்பீட்டளவிலான சுதந்திரத்தை வழங்கி அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் கோட்பாடுகளையும் வரையறுத்தனர். எந்தவொரு அங்கத்திற்குள்ளும் அதிகாரம் குவிந்து விடக்கூடாது என்பதற்காக அவற்றின் செயல்பாடுகளில் ஒன்றில் மற்றது தலை யிடாமலும், ஊடுருவாமலும் இருக்கும்படியாகவும் அவற்றுள் ஒத்திசைவின்மை உருவாகிவிடக்கூடாது என்றும் கருதித்தான் இந்தப் பகிர்வு வரையறுக்கப் பட்டது. இந்த ஒப்பீட்டளவிலான சுதந்திரம் இருந் தாலும்கூட இந்த மூன்று அங்கங்களும் ஒருபோதும் வர்க்கத்திற்கு அப்பாற்பட்டதல்ல, ஆளப்படும் மக்களின் நலன்களுக்கெதிராக செல்ல வேண்டி இருப்பின் இந்த அங்கங்கள் அவ்வாறு செய்து ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கத் தவறாது. அதே நேரத்தில், சட்டம் மன்றங்கள் இயற்றும் சட்டங்களும் நிர்வாகம் இயற்றும் அல்லது நடைமுறைப்படுத்தும் சட்டங்களும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துக்களில் கூறப்பட்டிருப்பதைப் போல் உள்ளதா என்பதைச் சரிபார்க்கும் கடமையும் நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சரி பார்க்கும் பணி நீதித்துறை மறுசீராய்வு என்று அழைக்கப்படுகிறது. ஆனாலும் கூட, பாராளு மன்றத்தின் / சட்டமன்றங்களின் மேலதிகாரத்தைப் பாதிக்காதவகையில் அதை உத்திரவாதப்படுத்தும் வகையில் இத்தகைய மறுசீராய்வு ஒரு குறுகிய வரம் பிற்குள் வைக்கப்பட்டது. பூர்ஷ்வாக்கள், அவர்கள் ஒரு சமூக சக்தியாக வளர்ந்த காலத்தில் பூர்ஷ்வா ஜனநாயகம் உருவெடுத்த காலத்தில், நீதித்துறையின் சுதந்திரத்தைப் பொறுத்தமட்டில் மக்கள் கருத்தே மேலான அதிகாரம் படைத்தது என்று கருதினர். பாராளுமன்ற ஜனநாயகத்தின் இந்த மூன்று அங்கங் களில், சட்டமன்றம் தான் தேர்தல்கள் மூலமாக மக்களால் நேரடியாக உருவாக்கப்படுகிறது. எனவே ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள எவரும் மக்களுடைய கருத்தே, இறுதியான வெற்றி என்பதையும் நம்பியே ஆகவேண்டும். நாட்டை மக்கள் ஆளுகிறார்கள் என்றால் மக்களுடைய விருப்பம் மக்கள் கருத்து மூலமே வெளிப்பட வேண்டும்.

ஆனால், யதார்த்தத்தில், பூர்ஷ்வா ஜனநாய கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை திரும்பப்பெறும் உரிமை மக்களுக்கு அளிக்கப்படாத வரையில் இத்தகைய மேலதிகாரம் என்பது வெறும் பெயரளவிலானதொன்றே. அதோடு பிரதான வாக் காளர்களாகிய மக்கள், அவர்களது பிரதிநிதிகளிட மிருந்து தனிமைப்படுத்தப்படுகின்றனர். அதோடு அவர்களது சொந்த அல்லது பொது நலனைப் பாதிக்கும் சட்டங்கள் பாராளுமன்றத்தில் இயற்றப் படுவதில் அவர்களால் எதையும் சொல்ல முடிய வில்லை. இப்படித்தான் பொதுமக்களின் விருப்பங் களும் குறைகளைக் களைவதும் தொடர்ந்து நிறை வேறாமல் உள்ளன, அதோடு அவர்களது உடனடித் தேவைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் அரசாங்கங் களின் திட்ட நிர்ணயத்தில் எந்த இடமுமில்லை. எனவே நீதித்துறை சுதந்திரமானதாகவும் நடு நிலையானதாகவும் இருக்கும் என்று கருதிக்கொண்டு மக்கள் அதை நாடுகின்றனர்.

ஆக இந்த மூன்று அங்கங்களின் அடிப்படைக் கட்டமைப்பிலும் அவற்றின் அதிகாரப் பகிர்விலும் ஒன்றுக்கொன்று பரஸ்பர தொடர்புகளும் பகிர்வும் உள்ளன. ஆபிரகாம் லிங்கன் போன்ற புகழ்பெற்ற ஜனநாயகவாதிகள் கொண்டிருந்த கருத்துக்களின் அடிப்படையில் யு.எஸ்.ஏ.வின் மைய அரசியல மைப்பில் மேற்கூறிய அம்சங்கள் அரசியலமைப்புரீதி யாகவும் அதிகாரப்பூர்வமாகவும் கச்சிதமாகப் பின் பற்றப்படுகின்றன. இதே மாதிரி மற்ற நாடுகளில் பின்பற்றப்படுவதைப் போல் இந்தியாவும் பின் பற்றுகிறது.

தொடர்ச்சி 5ம் பக்கம்

# தனிநபர் கொலை அடிப்படையிலான அரசியலும் புரட்சிகர அரசியலும்

சமீப காலங்களாக தனிநபர் கொலைச் சம்பவங்கள் பொது இடங்களில் மிக முக்கியமான நிர்வாக அலுவலகங்களில் ஆங்காங்கே தொடர்ச்சி யாக குண்டுவெடிப்புச் சம்பவங்கள், ரயில் தண்ட வாளங்கள் மற்றும் பாலங்களை வெடி வைத்துத் தகர்த்தல், மக்கள் கூட்டம் நிறைந்த பேருந்தின் மீது துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்தல் மற்றும் அதிநவீன ஆயுதங்களைக் கொண்டு மறைந்திருந்து தாக்குதல் என யாவும் நடைபெற்று வருகின்றன. இந்தத் தாக்குதல்கள் மேற்கூறிய இலக்குகள் மட்டு மல்லாது, பெருமளவில் அப்பாவி மக்களின் மீதும் கூட தொடுக்கப்பட்டு அவை மக்களின் உயிர்களை மிகக் கொடூரமாகப் பலிகொண்டிருக்கின்றன.

இம்மாதிரியான மிக கண்டிக்கத்தக்க வன்முறை மற்றும் கொலை நடவடிக்கைகளின் பின்னணியில் பல்வேறுபட்ட தீவிரவாத, பிரிவினைவாத மற்றும் பிளவுவாத வகுப்புவாத குழுக்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. பல தருணங்களில் இந்த கொடுஞ்செயல்களை தாங்களே திட்டமிட்டுச் செய்த தாக இதில் சில குழுக்கள் ஒப்புக்கொள்ளவும் செய் கிறார்கள். ஆனால் இவ்வாறான அனைத்துச் சம்பவங் களிலும் பாதிப்பிற்குள்ளாவதென்னவோ ஈவிரக்க மற்ற முதலாளித்துவத்தின் அரவைச் சக்கரத்தில் வதைபடும் நிராதரவான பொதுமக்கள்தான். அவர்கள் ஒன்று கொல்லப்படுகிறார்கள் அல்லது மிகப் பலத்த காயப்படுத்தபடுகிறார்கள், தங்களது சொத்துக்களை இழக்கிறார்கள். தண்டனைக்கும் சித்திரவதைக்கும் உள்ளாகிறார்கள், மற்றும் இம் மாதிரியான வெறியாட்டங்களுக்கும், கொலைத் தாக்குதலுக்கும், திட்டமிட்ட வன்முறைக்கும் எந்த நேரத்திலும் எங்கேனும் பலியாவோமோ என்ற பய உணர்வினால் தொடர்ந்து பீடிக்கப்பட்டு நிம்மதி யிழக்கிறார்கள்.

மாவோயிஸ்ட் என்று தங்களைப் பறைசாற்றிக் கொள்பவர்களும் கூட இம்மாதிரியான நடவடிக் கைகளில் ஈடுபட்டுவருவதைக் காணமுடிகிறது. கடந்த மே மாதம் 25ம் நாள் 150 பேர் கொண்ட ஒரு ஆயுதம்தாங்கிய கும்பல் சத்தீஸ்கர் மாநிலத்தின் பாஸ்தார்க் சுமா தேசிய நெடுஞ்சாலையில் சென்ற வாகன அணிவகுப்பைத் தாக்கியதில் பாதுகாப்புப் படையினர் உட்பட சில ஆளுங்கட்சித் தலைவர் களும் 20 ஏழை மலைவாழ் மக்களும் கொல்லப் பட்டார்கள். அதற்கடுத்த இரண்டு நாட்களிலேயே பீஹார், ஜம்மியு மாவட்டத்தில் பாட்னாவிற்கு 170 கி.மீ தொலைவில் ஒரு ரயில்பெட்டியில் குண்டு வெடிப்பு 3 பயணிகளின் உயிர்களைப் பலி கொண்டது. மூன்று வருடங்களுக்கு முன்பு சத்தீஸ்கர் மாநிலத்தின் தாண்டிவாடா மாவட்டத்தில் சில சிறப்புக் காவல்படை அதிகாரிகள் பயணித்த பேருந்து தாக்கப்பட்டதில் அப்பாவிப்பயணிகள் உட்பட 40 பேர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தனர். அதே வருடத்தில் மேற்கு வங்கத்தின் ஜார்கிராம் நகருக்கு அருகில் தண்டவாளங்களை சேதபடுத்தியதன் காரணமாக ஹவுரா மும்பை ஞானேஸ்வரி எக்ஸ் பிரஸ் ரயில் கவிழ்ந்து 140 அப்பாவி பயணிகள் பலியானதோடு 100க்கணக்கானவர்கள் படுகாய மடைந்தார்கள்.

மேலும் தீவிரவாதிகளை, தேசவிரோத சக்தி களை கிளர்ச்சியாளர்களை ஒடுக்குகிறோம் என்ற பெயரில் தீவிரவாதத்திற்கு எதிராக அரசுப்பாது காப்புப் படைகளால் கட்டவிழ்த்துவிடப்படும் எதிர் தீவிரவாத நடவடிக்கைகளாலும் மக்கள் மிகுந்த துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். தங்களின் உடைமைக்கும் உயிருக்கும் தொடர்ச்சியாக ஆபத்தை விளைவிக்கும் இந்த அபாயத்தை எதிர்கொள்வது ஏழை எளியவர்களுக்கு மேன்மேலும் கடினமாகிவரு கிறது. அதே நேரத்தில் செம்பதாகையை ஏந்திக் கொண்டு மார்க்ஸிசம் என்ற பெயரில் இம்மாதிரி யான கொடூரமான இழிசெயல்களை எவ்வாறு செய்யமுடியும் என்றும் சிந்திக்கத் தெரிந்தவர்கள் வியப்போடு கவனித்துவருகிறார்கள்.

**மக்களின் தாங்கொணாத துன்ப துயரங்கள்**

மக்களின் பொருளாதார–அரசியல்–சமூகக் கலாச்சார வாழ்க்கை அனைத்தும் தாங்கொணாத துன்ப துயரத்தால் சூழப்பட்டு மிகவேகமாக சீரழிந்து வரும் நிலையில் இந்த பயங்கரவாதத் திகிலூட்டும் பூதம் மக்களின் வாழ்க்கையைக் கவ்விப்பிடித் துள்ளது. சுழன்றுயரும் விலைவாசி, அதிகரித்துவரும் வேலையின்மை, பெருவாரியாக நடைபெற்று வரும் வேலையிழப்பு, விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு போதிய நியாயமான விலை கிடைக்காமை, மிகப் பெருமளவிற்கு வருமான இழப்பு, மற்றும் மக்கள் மீது திணிக்கப்பட்டு வரும் பெருமளவிலான நிதிச் சுமைகள் ஆகியவை மக்களின் பொருளாதார வாழ்க்கையை இறுக்கிப்பிடிக்கின்றன. இரத்தம் சிந்தி போராடிப் பெற்ற அனைத்து ஜனநாயக உரிமை களும் கொஞ்சம் கொஞ்சமாகத் திட்டமிட்ட முறையில் படிப்படியாக பறிக்கப்பட்டுவருகின்றன. உரிமைகளுக்காகப் போராடுபவர்களின் குரல்கள் நசுக்கப்படுகின்றன. குறைந்தபட்சக் கல்வியும், சுகா தாரமும், மருத்துவ வசதியும் மற்றும் அடிப்படை வசதிகளும் ஏன் குடிநீர் கூட மக்களுக்கு இன்று கிடைப்பதில்லை. பட்டினிச்சாவுகள், தற்கொலைகள், ஊட்டச்சத்தின்மை, அதிகரித்துவரும் குற்றச் செயல்கள் மற்றும் பெண்களின் மீதான கொடுந் தாக்குதல்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல், பாலியல் வக்கிரங்கள், போதைக்கு அடிமையாதல், எங்கும் வியாபித்திருக்கும் ஊழல், உன்னதமான உணர்வுகளும் மனிதத் தன்மையும் விரைவாகச் சிதைந்துவரும் நிலை இவையனைத்தும் நம் சமுதாயத்தின் சமூகக் கலாச்சார களத்தில் நிகழ்ந்து வரும் சீரழிவிற்கான அடையாளங்

தொடர்ச்சி 2ம் பக்கம்

# தனிநபர் கொலை அடிப்படையிலான அரசியல்...

1ம் பக்கம் தொடர்ச்சி

களாகும். ஒவ்வொரு நிலையிலும் துன்புறுத்தல், நீதி தவறுதல், தொல்லை கொடுத்தல் இவையாவும் வாழ்க்கையை கெட்ட கனவாக மாற்றிவிட்டன.

ஆனால் இந்த பல்கிப் பெருகும் துயரங்கள், ஏழ்மை, வறுமை, இயந்திரகதியிலான அடிமை உழைப்பு, இவையாவும் எல்லாம் வல்ல இறைவனின் செயலோ அல்லது மாற்றமுடியாத தலைவிதியோ அல்ல. இதற்கான ஆணிவேர் மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடித்தளத்தில் அமைந்திருக்கும் முதலாளித்துவ சமூக அமைப்பு முறையில் இருக் கின்றன அனைத்து வகை தீமைகள், முறைகேடுகள், இன்னல்கள் மற்றும் பிரச்சினைகளும் இந்த முதலா ளித்துவ சமூக அமைப்பினாலேயே உருவாகி பரவி வருகின்றன. இந்த சமூக அரசியல் பொருளாதார அமைப்புமுறை முழுவதும் – சுரண்டப்படும் பல கோடி வெகுஜனங்களின் எலும்புகூடுகளின் குவியலின் மீது தங்களின் சாம்ராஜ்ஜியத்தினை அமைத்துக் கொண்டிருக்கிற ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் கேடுகெட்ட நலன்களைப் பாதுகாப் பதற்காகவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே விடுதலை பெறுவதற்கான கேள்வி என்பது செத்து சிதிலமடைந்து போய்விட்ட முதலாளித்துவம் என்ற பிணச்சுமையை எடுத்தெறிவதோடு பிரிக்கவியலாது பிணைந்திருக்கிறது.

ஆகவே இந்த முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சியை சாதிப்பதற்கு– இன்னலுறும் வெகு ஜனங்கள் புரட்சிகர விழிப்புணர்வினால் எழுச்சி பெற்று சரியான புரட்சிகர சித்தாந்தத்தினால் உணர் வூட்டப்பட்டு சரியான புரட்சிகரக் கட்சி மற்றும் தலைமையை உருவாக்கி தங்களது அணியினரை ஒன்றுதிரட்டி வர்க்க மற்றும் வெகுஜனப் போராட் டங்களை தொடர்ந்து உக்கிரப்படுத்தி புரட்சிகரப் போராட்டங்களை சரியான புரட்சிகரத் தலைமையின் கீழ் வார்த்தெடுக்கவேண்டியது மிக இன்றியமையாத தாகும். குறைந்தபட்சம் இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் புரட்சிகர விழிப்புணர்வினால் எழுச்சிபெற்று புரட்சிகரப் போராட்டங்களில் குதித்தல் வேண்டும்.

ஆனால் ஆளும்வர்க்கம் மிக நேர்த்தியாக திட்ட மிட்ட வகையில் மக்களை சிந்தனை ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் முடக்கி சமூகத்திலிருந்து அந்நியப்பட்ட ஒரு மனநிலையை அவர்களிடத்தில் உருவாக்கி அனைத்து வகையான பிரிவினை எண்ணங்களையும் ஊக்குவித்து அவர்களின் ஒற்று மையைக் குலைக்கிறார்கள். பாராளுமன்ற அரசியல் மாயைக்குள் அவர்களை மூழ்கடிக்கிறார்கள். தலை விதி என நொந்து கொள்ளும் விதிவசவாதம் மற்றும் வெறிவாதத்தினை கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவர்களாக அவர்களை மாற்றுகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மனிதனிலும் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அவர்களை வக்கிர உணர்வுகளுக்கு ஆட்பட்டவர்களாக மாற்றுவதன் மூலம் மக்களின் தார்மீக முதுகெலும்பை உடைத் தெறிகிறார்கள். தங்களைக் காத்துக் கொள்ளவும் எதிர்ப்புக்காட்டவும் இயலாத வலிமையற்றவர் களாக மாற்றி ஒரு விலங்கினைபோன்ற வாழ்க்கை நிலைக்குத் அவர்களைத் தள்ளிவிடுகிறார்கள். இவை தான் செத்து மடியும் முதலாளித்துவத்தின் வஞ்சகத் திட்டமாகும்.

### பூர்ஷுவா நலன்களுக்கு அடிபணிந்து சேவை செய்யும் சக்திகளும் சமூக ஜனநாயக சக்திகளும் இறந்து கொண்டிருக்கும் முதலாளித்துவத்தினை காப்பாற்றி மக்கள் விடுதலை பெறுவதனைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்

ஆனால் இந்த உண்மை மக்கள் முன்பு மிகத் திறமையாக மறைக்கப்பட்டுவருகிறது. சரியான கோரிக்கைகளுக்கான மக்கள் போராட்டங்கள் வளர்ச்சி பெறுவதற்குத் தடையாக பல்வேறு புரட்சிக்கு விரோதமான சக்திகள் மக்களை பல்வேறு பிரிவினை உபாயங்களைக் கைக்கொண்டு வழிநடத்தி திசைதிருப்புகின்றன. அரசியல் சக்திகள் இதனை வேண்டுமென்றே இவ்வாறு செய்துவருகின்றன மற்ற சில சக்திகள் புரட்சிகர கருத்தியல், புரட்சிகர செயல்முறைப்போக்கு மற்றும் புரட்சியைப்பற்றிய தவறான புரிதல் காரணமாக இவ்வாறு செய்துவரு கின்றன. ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் நம்பகமான பிரதிநிதிகளுள் ஒன்றான காங்கிரஸ் மற்றும் பிற மாநில பூர்ஷுவாக் கட்சிகளான திரி ணாமுல் காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க, பி.எஸ்.பி, எஸ்பி, பி.ஜேபி, தெலுங்கு தேசம் கட்சி, அகாலிதள், சிவசேனா போன்ற கட்சிகள் தேர்தல் மூலம் தாம் ஆட்சிக்கட்டிலில் அமர்த்தப்பட்டால் வாழ்க்கையின் அனைத்துப் பிரச்சினைகளும் சரி செய்யப்பட்டு விடும் என்று கூறி மக்களைத் தவறாக வழிநடத்தி வருகிறார்கள். ஆளும் வர்க்கத்தின் மற்றுமொரு நம்பகமான ஏஜெண்டான வகுப்புவாத குணம் சத்திற்குப் பெயர்போன விசுவாசமான பி.ஜே.பி. யும் கூட இதே போன்ற போலி வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏய்த்து வருகிறது. அவர்களின் கவனமெல்லாம் வாக்குவங்கிகளை உருவாக்குவதும் மக்களை பூர்ஷுவா வாக்குவங்கி அரசியல் எல்லைக்குள் சிறைப்படுத்தி வைப்பதுமேயாகும்.

சி.பி.ஐ. மற்றும் சி.பி.ஐ.(எம்) போன்ற போலி மார்க்சிஸ்ட்கள் இதில் மிகவும் கேடு விளைவிக்கும் செயலைச் செய்துவருகிறார்கள். மார்க்சிய லெனினிய முகமூடி அணிந்து கொண்டு அப்பட்ட மான சமூக ஜனநாயகவாதிகளாக உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையில் அதாவது சுரண்டப் படுபவருக்கும் சுரண்டுப்படுபவருக்குமிடையில் சமரசம் செய்கின்ற வேலையை திறம்படச் செய்து, வர்க்கப்போராட்டத்தினை கூர்மைப்படுத்தும் போராட்ட வழிமுறைக்குப்பதிலாக வர்க்க இணக்க கொள்கையை உட்புகுத்தி போராட்ட இயக்கத்தின் உள்ளிருந்தே தொழிலாளர்கள் மற்றும் விவசாயி களின் போராட்ட உணர்வெழுச்சியை மழுங்கடித்து அதன் மூலம் ஆளும் முதலாளித்துவ வர்க்கம் மக்கள் முன் அம்பலப்படுவதை தந்திரமாக மூடிமறைத்து வருகிறார்கள். இந்த இயக்கங்களின் அரசியல் நடவடிக்கைகள் திட்டங்கள், நிகழ்ச்சிகள், மேடைப் பேச்சுகள் மற்றும் இவையெல்லாவற்றுக்கும் மேலாக அரசாங்கத்தினை நடத்தும் அணுகுமுறை இவை யனைத்தையும் ஒருவர் மிக கவனமாகப் கவனித்து வருவாரெனில், அவர்களின் அரசியல் மையக்கருத்து – தேர்தல், தேர்தல் சார்பு மனோநிலையை மக்களி டத்தில் பயிற்றுவிப்பது, தேர்தல் வெற்றி தோல்விக் கணக்குகள் அடிப்படையில் காய் நகர்த்துவது மற்றும் தேர்தல் வெற்றியை அதிகப்படுத்த எந்த பூர்ஷுவாக் கட்சிகள் அல்லது அணிகளோடும் கூட்டுச் சேர்ந்து கொள்ளும் வாய்ப்பினைத் தேடுவது என்பதாகவே இருப்பதை எவரும் காணமுடியும். ஒட்டுவேட்டை நடத்தும் மற்றபிற பூர்ஷுவா அரசியல் கட்சிகளைப் போலவே சி.பி.ஐ.,சி.பி.ஐ.(எம்) தலைவர்களும் பாராளுமன்ற அரசியல் மாயையை மக்களிடத்தில் ஊட்டிவளர்ப்பதிலேயே மும்முரமாக செயல்பட்டு வருகிறார்கள். இதனால் பெருகிவரும் மக்களின் ஆவேசமும் கோபமும் புரட்சிகரப் போராட்டங் களுக்கு வழியமைக்கும் மிக நேர்மையான ஜனநாயக இயக்கங்களின் பேரலையில் தனது வெளிப் பாட்டை காண்பதற்குப் பதிலாக ஒட்டுச் சீட்டில் முத்திரை குத்துவதோடு வடிந்தும் இறுதியில் முடிந்தும் போகிறது. இது இக்கட்சிகளுக்கு தேர்தல் லாபத்தைக் கொடுக்கிறது.

மேலும் இம்மாதிரி மக்கள் முதுகில் குத்தி மதிப்பு மிக்க சேவையை முதலாளித்துவ வர்க்கத்திற்குச் செய்த இந்த போலி மார்க்சிஸ்ட்டுகள் ஆளும் வர்க் கத்தின் மிகத் தாராளமான ஆதரவினைப் பெறு கிறார்கள். ஆளும் வர்க்கத்தின் தயவில் தேசிய அரசியலில் பிரதான இடதுசாரிகள் என்ற நிர்வாக ரீதியிலான அங்கீகாரத்தினைப் பெறுகிறார்கள். அந்த செல்வாக்கைக் கொண்டு பதவியையும் அதி காரத்தினையும் அனுபவித்து வருகிறார்கள். இதன் காரணமாகத்தான் உலகத்தின் மாபெரும் மார்க்சிய அத்தாரிட்டிகள் (பாட்டாளிவர்க்கத்தின் தலைவர்கள்) சமூக ஜனநாயக சக்திகளே முதலாளித்துவத்தின் கடைசிப் புகலிடம் ஆகவே சமூக ஜனநாயகவாதத் திற்கு முடிவு கட்டாமல் முதலாளித்துவத்திற்கு முடிவுகட்டுவது சாத்தியமில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆளும் பூர்ஷுவா வர்க்கத்திற்கு ஆதரவான பிரிவினைவாத – பிளவுவாத – குறுகிய இனவாத– வெறிவாத சக்திகளும்கூட மக்களின் கோபா வேசத்தை திசைதிருப்பும் கெடுநோக்கம் கொண்ட வேலையைச் செய்து வருகிறார்கள். இந்த சூட்சுமத்தை உணராத மக்கள் ஜனநாயக வெகுஜனப்போராட்டப் பாதையிலிருந்தும் புரட்சிகரப் போராட்டங்களி லிருந்தும் விலகியிருக்கிறார்கள். இந்த பிரிவினை சக்திகள், ஏதேனும் ஒரு சமூக மக்கள் அல்லது குறிப்பிட்ட பகுதியினரின் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவது பற்றிப் பேசுகிறார்கள். அவர்களின் எரியும் வாழ்க்கைப்பிரச்சினைகள் அனைத்திற்கும் ஆயுதப் போராட்டத்தின் மூலமாகத் தீர்வுகாணப்பட முடியும் என்றும் சொல்கிறார்கள், அதற்கு இனத் தூய்மைசெய்தல், வெறித்தனமான கொலை, வன் முறை அகியவற்றை ஆதரித்து ஊட்டி வளர்க் கிறார்கள். வெளித்தோற்றத்திற்கு இவை பாராளு மன்ற ஒட்டு அரசியலை புறக்கணிப்பதைப் போலவும் மக்கள் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க போராட்டப்பாதையினை கைக்கொள்ளவேண்டும் என்று உணர்வூட்டுவது போலவும் தோன்றலாம். ஆனால் அவர்களும் கூட தங்களது ஆயுதங்களை கொடூர முதலாளித்துவத்தை நோக்கி திருப்பவில்லை.

மாறாக அவர்கள் மிகத் தந்திரமாக அதனை மறைக்கிறார்கள். கொடூர முதலாளித்துவத்தின் ஒடுக்குமுறையினால் வாட்டி வதைக்கப்படுகிற ஒரு பகுதி உழைக்கும் மக்களுக்கு எதிரியாக இன் னொரு பகுதி மக்கள் பிரிவினரை முன்நிறுத்து கிறார்கள். இவ்வாறாக, அவர்கள் வகுப்புவாத– இனவாத வெறுப்புணர்வை தொடர்ந்து ஊட்டி வளர்த்து ஒரு பகுதி மக்களுக்கு எதிராக பிறபகுதி மக்களைத் தூண்டிவிட்டு அவர்களை சகோதரத்துவ சண்டைகளில் மோதவிட்டு அப்பாவி மக்களை இரத்தம் சிந்தவைத்து உழைக்கும் மக்களின் ஒற்று மையை குலைக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் ஜாதி, இன, மத, பிராந்திய, மொழி எல்லைகளைக் கடந்து மக்கள் வாழ்க்கையில் சீரழிவுகளைக் கொண்டுவரும் ஆளும் முதலாளி வர்க்கம் எவ்வித பாதிப்பிற்கும் உட்படுத்தப்படாமல் விடப்படுகிறது. பிளவுவாத குழுக்களும் கூட வன்முறை மற்றும் பயங்கரவாதத்தைப் பயன்படுத்தி அவர்களின் கோரிக் கைகளை பெறுவதற்காக இந்திய அரசிலிருந்து பிரிந்து புதிய தேசத்தை உருவாக்குவதாகச் சொல் கிறார்கள்.

ஆனால் இதுவரையில் இருதரப்பிலும் இரத்த ஆறு வழிந்தோடியிருக்கின்றன, சகோதரர்கள் மற்றும் அண்டை அயலார்கள் ஒருவரையொருவர் வெட்டி கொலை செய்திருக்கிறார்கள் இனவாத–வகுப்பு வாத வெறுப்பு மற்றும் பகையுணர்ச்சியினால் இவைபோன்ற பிரிவினைக் குழுக்களின் தலை வர்கள் அகால மரணமடைந்திருக்கிறார்கள். ஆனால் இவை அனைத்தும் நடந்தபின்பும் கூட மக்களின் ஒரு சிறு பிரச்சினையும் கூட தீர்ந்தபாடில்லை, மாறாக அதிகரித்தே வந்திருக்கிறது. ஆனால் அதற்கு நேர்மாறாக ஆளும் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் அதன் அரசாங்கத்தினை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்களின் ஒன்றுபட்ட போராட்ட இயக்கங்கள் நடத்த வேண்டியதன் தேவை மிக அதிகளவில் தடைபட்டு நிற்கிறது. இயற்கையாகவே ஆளும் சுரண்டல் ஆட்சிக்கு எதிரான மக்கள் இயக்கங்கள் தோன்றா மலிருக்க இந்த அல்லது அந்த காரணத்தைச் சொல்லி ஒடுக்கப்பட்ட மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் தனது திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆளும் வர்க்கத்தினால் இந்த பிரிவினைவாத சக்திகள் மிகவும் பயனுள்ள ஒன்றாக பார்க்கப் படுகிறது. ஆகையினால், ஆளும்வர்க்கமும் கூட இந்த சக்திகளை மிகவும் வெளித்தெரியாத வகையில் ஆதரிக்கின்றன. நம் தேசத்தின் வடகிழக்குப் பகுதி முழுவதும் இந்த அவலத்திற்கு மிகச்சிறந்த சாட்சி யங்களாகத் திகழ்கின்றன.

### நக்சலைட்டுகள் மற்றும் 'மாவோ யிஸ்ட்டுகளின்' செயல்பாடுகளினால் ஏற்படும் நாசகரமான விளைவு

முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப்புரட்சிக்கு ஏதுவான வகையில் விரும்பப்படுகின்ற ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் மட்டுமே பாடுபடும் மக்களின் வாழ்க்கையில் சிறிதளவேனும் நிவாரணத்தைக் கொண்டுவரும். அனைத்து அம்சங்களிலுமான நெருக் கடிகளிலிருந்து இறுதி விடுதலை, புரட்சியின் மூலம் சாதிக்கப்படவேண்டிய தேவையை மக்கள் படிப் படியாக புரிந்துகொள்ளும் விழிப்புணர்வினை இப்போராட்டங்கள் பெறச்செய்யும். ஆனால் அவையும் கூட சீனப்புரட்சியின் சிற்பியும் மாபெரும் மார்க்ஸிய அத்தாரிட்டியுமான மாசேதுங் அவர்களின் சிந்தனைகளை பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டு தங்களை மாவோயிஸ்ட்கள் என்று பறை சாற்றிக் கொள்பவர்கள் மற்றும் நக்சலைட்களின் செயல்பாடுகளால் மிக மோசமாக பாதிப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றன.

*1960*இல் சி.பி.ஐ.(எம்)மிலிருந்து பிரிந்த சி.பி.ஐ. (மா.லெ) என்ற இயக்கம் சீனப்புரட்சியின் போர்த் தந்திரத்தை கண்மூடித்தனமாகக் காப்பியடித்து அதிகாரத்தை கைப்பற்ற வர்க்க எதிரிகளை, நிலச் சுவான்தார்களை ஒழித்துக்கட்டுகிறோம் என்ற பெயரில் தனிநபர் கொலை செயல்களையும் துணை இராணுவ மற்றும் போலீஸ் படைகளோடு ஆயுதமோதல்களையும் துவங்கியது என்பதை இங்கே நினைவுகூற வேண்டும். நக்ஸலைட் சித்தாந்த வாதிகள், இம்மாதிரியான 'வீரதீரச் செயல்கள்' அரசு நிர்வாகத்தை எதிர்த்துப் போராட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு உத்வேகத்தை வழங்கி தாங்களாகவே புரட்சியை சாதிக்க மக்களைத் தூண்டும் என்ற நம்பிக்கையை ஊட்டி வளர்த்தார்கள். ஆனால் புரட்சியைப் பற்றிய இந்தப்புரிதல் அல்லது இந்தியச் சூழ்நிலை பற்றிய பகுப்பாய்வு என்பது உண்மைக்கு மிக வெகு தொலைவில் இருக்கிறது. துவக்கத்தில் மிகப்பெரும் உணர்வெழுச்சியை உருவாக்கிய இந்த நக்சலைட் இயக்கம் மிகக் குறுகிய காலத்தில் வடிந்து போனது. ஆயுதமோதலில் மிகப்பெரும் எண்ணிக் கையில் நக்சலைட்டுகள் கொல்லப்பட்டபோது அதி லிருந்து தப்பிப் பிழைத்த ஒருபகுதியினரிடத்தில் ஆழ்ந்த விரக்தி பற்றிக் கொண்டது. ஒரு பிரிவினர் தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கினர் மற்றொரு பிரிவினர் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் கையாட்களாக மாறினர். அதன்பின்பு இந்த சீர் குலைவிற்கு ஒருவரை மாற்றி ஒருவர் குறைகூறிக் கொண்டு எண்ணற்ற பல்வேறு குழுக்களாக அவர்கள் சிதறுண்டனர். இந்த ஒட்டுமொத்த நக்ஸலைட் படலமும் கூட பெருமளவிற்கு மக்கள் மத்தியில் வெறுப்பையும், உத்வேகக்குறைவையும், புரட்சிகர அரசியல் குறித்த எதிர்மறை உணர்வையும் உருவாக்கின. குறிப்பிடத்தக்க அளவில் மக்களை ஜனநாயக இயக்கப் பாதையிலிருந்து அது திசை திருப்பியது. இவ்வாறாக இந்த நக்ஸலைட் சாகச

தொடர்ச்சி 3ம் பக்கம்

# தனிநபர் கொலை அடிப்படையிலான அரசியல்...

2ம் பக்கம் தொடர்ச்சி

வாதம், நியாயமான ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் வளர்ச்சியுறுவதற்கு மிகப்பெரும் தடையை ஏற் படுத்தியது. உண்மையில் இவை பிற்போக்கு சக்தி களின் கைகளையே பலப்படுத்தின.

சில ஆண்டு இடைவெளிக்குப் பிறகு முதலா ளித்துவ ஒடுக்குமுறைகள் மீண்டும் அதிகரித்த வேளையில் நக்சலைட் குழுக்கள் மீண்டும் கை கோர்த்துக் கொண்டு சி.பி.ஐ(மாவோயிஸ்ட்) என்ற புதிய ஒரு குழுவை உருவாக்கின. இந்த புதிய கட்சி, தங்களது கட்சியமைப்பை நிறுவுவதற்கு இந்தியாவின் மிகப் பின்தங்கிய மற்றும் வஞ்சிக்கப்பட்ட ஏழை மலைவாழ் மக்கள் வாழும் இந்தியாவின் 6 மாகாணங் களில் குறிப்பாக மலைப்பகுதிகளைத் தேர்வுசெய்து, அப் பின்தங்கிய மக்கள் மத்தியில் தங்களது ஸ்தாப னத்தை நிறுவி ஒரு சில பகுதியினர் மத்தியில் அவர் களுக்கென ஒரு அணியினரையும் அவர்களால் உருவாக்கிக் கொள்ள முடிந்தது. மனிதனிலும் கீழான வாழ்க்கை நிலைக்குத் தள்ளப்பட்ட நிலையிலும், பாரபட்சத்திற்கும், புறக்கணிப்பிற்கும் ஆளாக்கப் பட்டு அனைத்து வகையிலும் ஓரம் கட்டப்பட்ட இந்த அப்பாவி மலைவாழ் பழங்குடி மக்கள் தங்களுக்குள் கொதிப்படைந்திருந்ததோடு செல்வத்தில் திளைத் திருந்த மேட்டுக்குடியினர் மீது மிகுந்த வெறுப்புணர் வையும் கொண்டிருந்தனர். இந்த வெறுப்புணர்வு என்பது வர்க்க விழிப்புணர்வல்ல, வர்க்க விழிப் புணர்வை அவர்கள் சரியான திசைவழியில் நடத்தப் படும் போராட்ட இயக்கங்களிலிருந்து மட்டுமே பெறமுடியும்.

ஆனால் வர்க்க விழிப்புணர்வென்றால் என்ன? புரட்சி என்றால் என்ன? அது எப்படி வளர்கிறது. எவ்வாறு குறிப்பிட்ட சூழ்நிலையில் புரட்சிகரப் போராட்டங்களை நடத்த வேண்டும் என்று அவர் களுக்கு விளக்கியுரைப்பதற்கெல்லாம் எவ்வித சிரமமும் மேற்கொள்ளாமல், சி.பி.ஐ (மாவோ யிஸ்ட்) தலைவர்கள், அம் மக்கள் தங்களது நியாய மான கோரிக்கைகளை வெல்வதற்கும், வறுமை மற்றும் ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்து மீள்வதற்கும் ஒரே வழி ஆயுதப்போராட்டமே என்று சொல்லி அவர்களை உணர்வூட்டும் வழிமுறையை மட்டுமே தேர்வுசெய்கிறார்கள். இதில் போர்த்திட்டமாக அவர்கள் போலீஸ் படையினை மறைந்திருந்து தாக்குதல் காவல் நிலையங்கள் போலீஸ் குடி யிருப்புகள் ஆகியவற்றைத் தாக்குதல், சிறைக்கூடங் களை தாக்கி கைதிகளை விடுவித்தல் ஆயுதக்கிடங்கு களைத் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றுதல், பொது இடங்களில் குண்டுவெடிக்கச் செய்தல் ரயில் தண்ட வாளங்களில் குண்டுவைத்தல் குறிப்பிட்ட தனிநபர் களைக் கொலை செய்தல், கடத்தல், வங்கிகளைக் கொள்ளையடித்தல், அச்சுறுத்தி பணம் பறித்தல் ஆகிய இவையாவும் 'புரட்சிகர யுத்தங்கள்' என்று முன்னிறுத்தப்படுகின்றன. அவர்களும் கூட மக்களிடம் ஆதரவு பெறுவதற்கான ஒரு துருப்புச் சீட்டாக சாதிய மற்றும் இனவாத பிரிவினைகளை பயன்படுத்துவது தவறு என்று கருதவில்லை.

இந்த மேம்போக்கான 'வீரதீர' ஆயுதச் சண்டைகள் முதலில் அநேக இளம்பருவ மலை வாழ் இளைஞர்களை, அவர்களிடமிருக்கும் தற்காலிக அளவிலான 'உற்சாகமும்' ஆர்வ மிகுதியும்' வடிகின்றவரை இந்த புதிய குழுவை நோக்கி ஈர்க்கும். அவ்வப்பொழுது நடத்தப்படும் வன்முறை மற்றும் தனிநபர் கொலை ஆகியவை அதிகாரிகளை புரட்சிக்கு அடிபணியச் செய்து விரும்பக்கூடிய அமைப்புமுறை மாற்றத்தை கொண்டுவரும் என அவர்களில் பலர் உண்மை யாகவே நம்புகின்றனர். ஆனால் நடப்பதென்ன வென்றால் தாக்குதல்கள் நடத்தப்பட்டபின்பு, அரசு தன்னுடைய அடக்குமுறை எந்திரத்தை அவர்கள் மீது ஏவி அவர்களைத் துடைத்தெறியும் செயல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர், பின்பு போலீஸ்—இராணுவ படையின் துப்பாக்கிக் குண்டு மழைக்கு தலைவர்களும் தொண்டர்களும் பலியா னார்கள். அவர்களால் இந்த அடக்குமுறையின் முன் தாக்குப்பிடிக்கமுடியவில்லை. அதன் பின்பு ஒரு ஆழ்ந்த விரக்தி அவர்களைப் பற்றிக்கொண்டது. ஸ்தாபனம் முழுவதும் குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டு விட்டது. 'இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புகிறோம்' என்ற பெயரில் தலைவர்கள் உள்பட அநேக செயல் வீரர்கள் நிர்வாகத்தினரிடம் அப்பட்டமாக சரண டைவது அதிகரித்தது.

மேலும் பரந்துபட்ட அளவிலான பொது ஜனங்கள் தொடர்ச்சியான வர்க்க மற்றும் வெகு ஜனப்போராட்டங்களின் அனுபவங்கள் மற்றும் பாடங்களின் மூலம் சி.பி.ஐ (மாவோயிஸ்ட்)களால் அணிதிரட்டப்படாததால் உடனடி அவசரக் கோரிக் கைகளை எழுப்பும் வரையில் அவர்கள் அக்கட்சி யில் நீடிப்பார்கள். 'மாவோயிஸ்ட்' இயக்கத்தின் ஊழியர்களும், அவர்களுக்கு ஆதரவளிக்கும் வெகு ஜனங்களும் அவர்களின் அடிப்படை ஆதாரமான தேவைகள் அவர்களுக்குக் கிட்டாததன் காரண மாகவே இம்மாதிரியான சாகசவாதப் பாதைக்குள் உள்ளிழுக்கப்பட்டிருக்கிறார்கள். புரட்சிகர விழிப்புணர்வு மற்றும் குணாம்சங்கள் அவர்களி டத்தில் போதிய வளர்ச்சிபெறவில்லை என்ற உண்மையை நன்றாகவே அறிந்து கொண்ட அரசு நிர்வாகமும் சில ரொட்டித்துண்டுகளை அவர்கள் முன்பு வீசி எறிந்து மிகத் தந்திரமாக 'வளர்ச்சி' அல்லது 'மேம்பாடு' என்ற துருப்புச் சீட்டை பயன் படுத்துகிறார்கள். ஆளும் தரப்பினர் ஒருபுறத்தில் மிகத்தீவிரமாக அடக்கி ஒடுக்கி மறுபுறத்தில் வளர்ச்சி என்ற ஆசைகாட்டும் காரட்கிழங்கை அவர்களுக்கு முன்பு தொங்கவிட்டதும் தங்களை 'மாவோயிஸ்ட்' என்று பறைசாற்றிக் கொள்பவர்களின் போராட் டத்தின் மீது மக்களுக்கிருந்துவந்த ஈர்ப்பு, வெறுப் பாகவும், அனுதாபம், அலட்சியமாகவும் மாறி விடுகிறது.

'மாவோயிஸ்ட்' இயக்கத்திற்குள் இருந்தவர்களே கூட இம்மாதிரியான சலுகை வழங்கும் மேம் போக்கான திட்டங்களுக்கு ஆதரவானவர்களாக மாறி தங்களை அரசு நிர்வாகத்திடம் விற்றுக் கொள் கிறார்கள். இந்த செயல்முறைப்போக்கில் ஒரு குறிப் பிட்ட பகுதி மலைவாழ் மக்களும் கூட இந்த 'மாவோ யிஸ்ட்' இயக்கத்திலிருந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். இது 'வளர்ச்சியை' ஊக்குவித்து மாவோயிஸ்ட் அபாயம் பரவுவதை தடுத்துவிட்டதாக பூர்ஷ்வா அரசாங்கம் மார்தட்டிக் கொள்ள உதவுகிறது. ஆக மொத்தத்தில் இது புரட்சியைப் பற்றி, மற்றும் புரட்சிகரப் போராட்டங்கள் வளர்ந்தெழும் முறை பற்றிய தவறான புரிதலின் வெளிப்பாடே ஆகும்.

### புரட்சியைப் பற்றிய இந்தியச் சூழ்நிலையை பற்றிய தவறான புரிதல்

சி.பி.ஐ.(மாவோயிஸ்ட்) இயக்கத்தின் தலைவர் களை எந்தத் தத்துவம் அல்லது கருத்து இன்னும் இழுத்துப் பிடித்து வைத்திருக்கிறது? விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டும் எவ்வித முன்னபிப்பிராய பேதத்திற்கும் கண்மூடித்தனத் திற்கும் இடங்கொடாமல் அவர்கள் உண்மையில் மாசேதுங்கின் சிந்தனைகளைப் பின்பற்றுகிறார்களா அல்லது நேர்மையான நோக்கங்களும் ஏழை மக்களுக்கு ஆதரவான மனமும் கொண்டிருந்தும் அதிலிருந்து விலகிச் செல்கிறார்களா என்பதனை தங்களுக்குத் தாங்களே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அவர்கள் உண்மையிலேயே புரட்சிக்கு உதவுகிறார்களா அல்லது புரட்சிக்கு இடையூறை ஏற்படுத்துகிறார்களா? புரட்சி என்றால் என்ன என்று கொள்கைகளை வகுப்பதிலும் அல்லது நடைமுறையில் அவற்றைப் பிரயோகிப்பதிலும் தெளிவான கருத்தை வெளியிடுகிறார்களா? மார்க்சிய—லெனினிய விஞ்ஞான கோட்பாடு களில் தெளிவாகப் புனையப்பட்டுள்ள புறவயப் பட்ட மற்றும் அகவயப்பட்ட சூழ்நிலைமைகள் கோரு கின்ற அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொறுப்பினை தோள்களில் தாங்கி சரியான திசை வழியில் புரட்சிகரப் போராட்டங்களை கட்டுவது ஆகியவை குறித்து கருத்தியல் உருவாக்கமோ அல்லது நடைமுறையில் பிரயோகிப்பதில் ஒரு தெளிவான கருத்தையோ கொண்டிருக்கிறார்களா?

மக்களுக்கு விடுதலைக்கான பாதையைக் காட்ட வல்ல மார்க்ஸிசத்தைப் பொறுத்தவரையில் ஒரு விஞ்ஞானப்பூர்வ வழிமுறையினைப் பின்பற்றியே புரட்சி என்பது அணிதிரட்டப்படவேண்டும். பெருகி வரும் முதலாளித்துவத்தின் தாக்குதல்கள் காரணமாக புரட்சி என்பது தானாகவே வந்துவிடுவதில்லை, மக்கள் ஒடுக்குமுறையையும் இன்னல்களையும் தாங்க வியலாது மிகத்தீவிரமாக விடுதலையைத் தேடுவ தாலும் மற்றும் நிலவும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் மீளவியலாத நெருக்கடி மேலும் உயர்ந்து இந்த அமைப்புமுறை தள்ளாடிக் கொண்டிருப்ப தாலும் இயல்பாகவே புரட்சிக்கான புறச்சூழல் கனிந்து விட்டிருப்பதாகக் கொள்ளலாம். வெறுமனே சாதக மான புறச்சூழல் உருவாகியிருப்பது மட்டுமே உடனடி யாக புரட்சியை வெற்றிக்குக் கொண்டுசெல்லாது அகச்சூழலும் கூட கனிந்து வரவேண்டும் மேலும் அவை இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்திசைந் திடவும் வேண்டும். அகச்சூழ்நிலை பக்குவமடை வதற்கு புரட்சிக்கான போதுமான தயாரிப்பும் அதற்கு ஆதரவான உழைக்கும் மக்களின் மனோபாவத்தை உருவாக்குவது என்ற அகச்சூழ்நிலை கனிவதை முன்தேவையாகக் கொண்டுள்ளது. லெனினிய முன்மாதிரியில் வாழ்க்கையின் அனைத்து அம்சங் களையும் தழுவிய சரியான புரட்சிகரக் கருத்தியல் என்ற ஆயுதம்தரித்த ஒரு சரியான புரட்சிகரக் கட்சி மட்டுமே மக்களின் அரசியல் விழிப்புணர் வினை அந்த அளவிற்கு உயர்த்தமுடியும் மேலும் வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களில் பங்கேற்கச் செய்வதன் மூலம் மக்களைப் பயிற்று வித்து வலிமையூட்டி தொடர்ச்சியாக சித்தாந்தப் போராட்டம் மிகச் சிரத்தையுடன் நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் வெகுஜனங்களை புரட்சி கரப் பாதைக்கு ஈர்த்து புரட்சிக்கு சாதகமாக அவர் களின் மிக உறுதியான ஆதரவினைப் பெற முடியும். ஒரு சரியான புரட்சிகரக் கட்சி சரியான புரட்சிகரக் கருத்தியலுடன் மக்களை புரட்சியை நோக்கி ஈர்ப்பதன் மூலம் முதலாளித்துவ அரசின் கூலிப் படையினை எதிர்க்கும் வல்லமை பொருந்திய ஒரு புரட்சிகர மக்கள் படையாக அது உருவாகி, போதிய பலம்பெற்று, சித்தாந்த மற்றும் ஸ்தாபனரீதியிலான வலிமை பெற்று, புரட்சிக்குத் தலைமையேற்கும் பொழுது புரட்சிக்கான அகவயப்பட்ட சூழ்நிலைமை பக்குவமடைந்ததாகச் சொல்லலாம்.

எனவே, புரட்சிக்கான அகவயப்பட்ட சூழ்நிலை மையை உருவாக்குவதற்கு லெனினிய மாதிரியில் அமைந்த சரியான புரட்சிகரக் கட்சி, புரட்சிகரக் கருத்தியல் மற்றும் சரியான அடிப்படை அரசியல் பாதையும் முன் தேவைகளாகும். இந்த முன் தேவை களை சி.பி.ஐ (மாவோயிஸ்ட்) நிறைவு செய்திருக் கிறதா என்றால் இல்லை. மாறாக மானத் தாங்கலுக் குள்ளான சில நக்சலைட்டுகளை உள்ளடக்கிய மற்றும் சி.பி.ஐ(மா.லெ)லிருந்து பிரிந்த இரண்டு குழுக்கள் கூடிச் சேர்ந்து வெறுமனே ஒரு பிரகடனத்தின் மூலமாக இக்கட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. வெறுமனே இனிய விருப்பங்களின் அடிப்படையில் உறுதியெடுத்துக்கொண்டு, ஆயுதப்போராட்டத்தின் மேலெழுந்தவாரியான உணர்வெழுச்சியுடன், உயிர் உட்பட அனைத்தையும் தியாகம் செய்ய தயார் நிலையில், தங்களை இராணுவ பயிற்சிக்கு உட் படுத்தி கொரில்லா போர் செய்யும் திறன்பெற்று விடுவதால் மட்டுமே ஒரு சரியான புரட்சிகர கட்சியை உருவாக்கிட முடியாது.

அடுத்த கேள்வி சரியான புரட்சிகரக் கருத்தியல் பற்றியதாகும். புரட்சிகரக் கருத்தியல் என்று சொல்கிற போது லெனின் வெறுமனே கட்சியின் அரசியல் திட்டம் மற்றும் கட்சியின் கொள்கையினைக் குறிப் பிடவில்லை மாறாக விஞ்ஞானம் உட்பட அறிவா தாரவியலின் அனைத்துக் கிளைகளையும் உள்ள டக்கிய அனைத்து அம்சங்களையும் தழுவிய புரிதல்கள் மற்றும் அனுபவங்களை இயக்கவியல் அடிப்படையில் ஒருங்கிணைத்து கட்சியின் மத்திய தலைமையால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு முழுமை பெற்ற அறிவாதார வகையினையே லெனின் குறிப் பிட்டார். சி.பி.ஐ (மாவோயிஸ்ட்) தலைமை மார்க்சிய தத்துவம் பற்றிய இதுபோன்ற எந்த ஒரு முழுமை பெற்ற புரிதலின் அடிப்படையையும் கொண்டிருக்க வில்லை. அவர்களின் கட்சி இது குறித்து எந்த இலக்கியத்தையும் கொண்டிருக்கவில்லை. அல்லது அவர்களின் தலைவர்கள் வெகுஜனங்கள் மத்தியில் இப்பொருள் குறித்து எந்த சித்தாந்த பிரச்சாரம் நடத்துவதையும் நம்மால் காணமுடியவில்லை.

இரண்டாவது கேள்வி, ஒரு குறிப்பிட்ட நாட்டில் மார்க்சிய—லெனினிய விஞ்ஞானத்தைப் பருண்மைப்படுத்தி மிகச்சரியாகப் பிரயோகிப்பதன் மூலம் அந்நாட்டின் குறிப்பிட்ட பருண்மையான சூழ்நிலைமையில் பருண்மையான பகுப்பாய்வின் அடிப்படையில் கட்சியின் கருத்தியல், புரட்சியின் கட்டம், மற்றும் புரட்சியின் போர்த் தந்திரத்தினை தீர்மானிப்பது பற்றியதாகும். சி.பி.ஐ. (மாவோ யிஸ்ட்)யை பொறுத்தவரை ''......இந்திய சமூகத்தின் குணாம்சம் அரைக்காலனி அரை நிலப்பிரபுத்துவ தன்மை கொண்டதாகும். இந்தியப் புரட்சி இந்த இரண்டு கட்டங்களைக் கடந்து வரவேண்டும். முதலில் இந்த அரைக்காலனி அரை நிலப்பிரபுத் துவ சமூகம் ஒரு சுதந்திரமான புதிய ஜனநாயக சமூகமாக மாறவேண்டும்.'' (ஸ்டேட்ஸ்மென் 7.9.2005)

இதற்கு முந்தைய சி.பி.ஐ(மா.லெ) மற்றும் நக்சலைட் தலைமையைப் போலவே, சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்)களும் சீனப்புரட்சியின் மாதிரியை கண்மூடித்தனமாகக் காப்பியடிப்பதையே இது காட்டுகிறது. அவர்கள் சீன நிலைமைகளை இந்திய யதார்த்தத்தின் மீது திணித்தனர். அவ்வாறாக இந்திய சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தின் செயல் முறைப்போக்கு மற்றும் பருண்மையான குணாம் சங்களைத் தீர்மானிப்பதில் மிகப்பெரிய தவறிழைத் தனர். சீனாவில் மார்க்சிய விஞ்ஞானத்தை மிகப் பருண்மையான சூழ்நிலைமையில் மிகப்பருண்மை யாக ஆய்வுசெய்து மாபெரும் மாசேதுங் அவர்கள் புரட்சிக்கு முந்தைய சீனா சுதந்திரமான ஜனநாயக நாடல்ல மாறாக தொழிலாளர்களின் போராட்டங் களை அணிதிரட்டுவதற்கு எந்த சட்ட உரிமையும் இல்லாத பயன்படுத்துவதற்கு எந்த பாராளுமன்றமும் இல்லாத அரைக்காலனி அரைநிலப்பிரபுத்துவ நாடாகும் என்று மிகத் தெளிவாகக் காட்டினார். ஆகவே அங்கு கிளர்ச்சி மற்றும் யுத்தம் தொடுப்பதற்கு முன்பு மிக நீண்டகால சட்டரீதியிலான போராட்டங் களுக்குச் செல்லவேண்டியது புரட்சியின் பணியல்ல, பெருநகரங்களை முதலில் கைப்பற்றி பின்பு கிராமங் களைக் கைப்பற்ற வேண்டியதில்லை மாறாக அதற்கு நேர் எதிராகச் செய்யப்படவேண்டும்.

இது எவ்வகையிலேனும் தற்போதைய இந்திய அரசின் கட்டமைப்புடன் ஒத்துப்போகிறதா? இல்லை. மாறாக அதைத் தீர்மானிப்பதற்கான ஒவ்வொரு அளவீட்டிலும் அது மிக வளர்ச்சியடைந்த முதலா ளித்துவப் பொருளாதாரமாகவும் ஏற்கனவே ஏகாதி

தொடர்ச்சி 4ம் பக்கம்

# தனிநபர் கொலை அடிப்படையிலான அரசியல்...

3ம் பக்கம் தொடர்ச்சி

பத்திய குணாம்சத்தினைக் கொண்ட மிக உறுதியாக நிலைநிறுத்தப்பட்ட ஒரு முதலாளித்துவ அரசின் ஒற்றை இராணுவ நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிலும் இருந்துவருகிறது.

முதலாளித்துவ நாட்டுக்கும் அரைக்காலனி அரை நிலப்பிரபுத்துவ சீனாவிற்குமிடையில் உள்ள இந்த வேறுபாட்டை சுட்டிக்காட்டி மாசேதுங் அவர்களும் கூட சீன அனுபவத்தை இயந்திரகதியாக, சூத்திரத்தைப் போல பின்பற்றுவதற்கு எதிராக எச்சரித்தார். மேலும் மாசேதுங் அவர்கள் இதனைத் தெளிவுபடுத்திக் கூறியதாவது:.... "மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்வதில் இரண்டு விதமான அணுகுமுறைகள் இருக்கின்றன. ஒன்று – சூத்திரவாத அணுகுமுறையில் நமது நிலைமைகளுக்குப் பொருந்துகிறதோ இல்லையோ அனைத்தையும் கொண்டுவந்து மறு நடவுசெய்வது." ...... மற்றொன்று – நமது சொந்த சிந்தனைப் பயன்படுத்தி நமது நிலைமைகளுக்குப் பொருந்துகின்றவை பலவற்றையும் குறித்து கற்றுக் கொள்வது. அதாவது, என்னவெல்லாம் அனுபவங்கள் நமக்குப் பயனுள்ளதாக இருக்குமோ அவற்றை உட்கிரகிப்பது. இந்த அணுகுமுறையைத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்". (மக்களிடம் நிலவும் முரண்பாட்டை சரியாகக் கையாள்வது குறித்து) பக்கம் 75.

அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்துவது என்னவெனில், "சரியான அல்லது சரியற்ற சித்தாந்த அரசியல் வழிமுறைதான் அனைத்தையும் தீர்மானிக்கிறது" என்பதையும் (தேர்வு நூல் பக்கம் 441) இதில் அவர் விரித்துரைத்துச் சொல்வதென்னவெனில், ஒருவரின் அடிப்படை அரசியல் வழி அதாவது எதிரியை இனம் காண்பது தவறாகிப் போனால் அவர் என்னதான் புரட்சிகர வார்த்தைகள், போராட்ட குணம் மற்றும் விரும்பப்படுகின்ற புரட்சியின் உத்வேகத்தோடு வெற்றுப்பேச்சுப் பேசினாலும் அவரின் வீழ்ச்சி தவிர்க்கப்படமுடியாது. மாறாக ஒருவரின் அரசியல் பாதை சரியாக இருந்தால் அவர் வரவிருக்கும் அரசியல் அதிகாரத்தைப் பெற்று புரட்சியை நிச்சயம் வெற்றிக்குக் கொண்டு செல்வார்.

### தனிநபர் கொலையும் தனிநபர் தீவிரவாதமும்

சி.பி.ஐ.(மாவோயிஸ்ட்) தலைமையானது செய்த தவறையே திரும்பவும் செய்வதற்கு தீர்மானித்து மீண்டும் முந்தைய அதேபின் விளைவுகளை வரவேற்கிறது. தவறான கருத்தியல் நிலைபாட்டைக் கொண்டிருப்பதோடு இக்கட்சி 'ஸ்தாபனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு மிதமிஞ்சிய வன்முறையைக் கையாள்வதிலும் வர்க்க எதிரிகளைத் தீர்த்துக் கட்டுவதிலும் இக்கட்சி மீண்டும் தனது நம்பிக்கையை வலியுறுத்தியுள்ளது என செளத் ஆசிய டெரரிசம் வலைத்தளத்தில் செய்தி வெளிவந்தது. தீவிரவாதச் செயல்கள் முதலாளித்துவ அரசு இயந்திரத்தை பலவீனப்படுத்துகிறது. அவ்வகையில் அது புரட்சிகர செயல்பாட்டுக்குத் துணைபுரிகிறது என்ற கருத்தில் சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்) தலைமைக்கு உடன்பாடு இருப்பதுபோன்று தான் தெரிகிறது.

ஆகையால்தான் 'வெகுஜனப் பாதை' ஸ்குவாட் நடவடிக்கையிலும் செய்யப்படும் களப்பணிகளில் தனிநபர்களைத் தீர்த்துக் கட்டலும், பீதியை கட்டவிழ்த்துதலும் இருக்கிறது. இவ்விடத்தில் மற்றொரு விஷயத்தை நினைவுபடுத்துவது அவசியம். அதாவது, இவர்களின் தவறான அரசியல் சித்தாந்த நிலைப்பாடு காரணமாகத்தான் 1960களில் "அனைத்து வர்க்க மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களும் திருத்தல் வாதத்திற்கான நேர்வழி" என்று நக்ஸலைட் தலைவர்கள் அறிவித்தார்கள். அதனையே சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்)களும் தற்போது ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, அவர்களைப் பொறுத்தவரை ஒரு ஒடுக்குமுறை அரசை எதிர்ப்பதற்கான ஒரே சாத்தியமான வழி ஆயுதப் போராட்டமாக மட்டுமே இருந்திட முடியும். இன்றைய சூழலில் அவ்வாறான ஆயுதப்போராட்டம் என்பது அவ்வப்போது நடத்தப்படும் ஆயுதத் தாக்குதல்கள், தனிநபர் கொலைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பயங்கரவாதத்தினைக் கட்டவிழ்த்துவிடுவது என்பதுதான். இந்த போர்த்தந்திரமுறை தானாகவே அரசியல் போராட்ட இயக்கத்தையும் ஏன் அரசியல் புரட்சியையும் கூட தூண்டிவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இம்மாதிரியான சிந்தனைக்குப் பின்னால் உள்ள தத்துவார்த்தக் குழப்பங்களை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். ஒட்டுமொத்த ஆளும் முதலாளி வர்க்கத்தையும் எதிரியாகக் கருதுவதற்குப் பதிலாக முந்தைய நக்ஸலைட்களைப் போலவே சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்) தலைவர்களும் சில தனிநபர்களை 'வர்க்க' எதிரிகளாகக் கருதி சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்)களும் அவர்களைத் தீர்த்துக்கட்ட திட்டமிடுகிறார்கள். இவ்வாறான பாதையில் தனிப்பட்ட போலீஸ்காரர்களை, பூர்ஷுவா அரசியல் தலைவர்களை, நிலச்சுவான்தார்களை அல்லது நிர்வாக இயந்திரத்திலிருக்கின்ற அதிகாரிகளை தனித்தனியாகக் கொலை செய்வது இந்த அமைப்புமுறையினை ஒருபோதும் மாற்றாது மாற்றவும் முடியாது மாறாக இது முதலாளித்துவத்தினை மூடி மறைக்கவே செய்யும்.

பாட்டாளிவர்க்கப் புரட்சியாளர்கள், மக்களை புரட்சிகரப் போராட்டங்களுக்குள் இணைக்க, அரசியல் முன்னேற்றத்தைச் சாதிக்க அவர்களைப் பயமுறுத்த வேண்டிய அவசியமில்லை. உண்மையாக பாட்டாளிவர்க்க விழிப்புணர்வால் உந்தப்பட்டவர்களுக்கு பூர்ஷுவாக்களை எதிர்த்த போராட்டம் என்பது தனிநபர் விருப்பங்களுக்கு அப்பாற்பட்டதும் வர்க்க அடிப்படையிலானதுமாகும். அவர்களின் வெறுப்பு வர்க்கத்திற்கு எதிரானதே தவிர தனிப்பட்ட முறையில் எந்தத் தனிநபருக்கும் எதிரானதல்ல. தொடர்ச்சியான விடாப்பிடியான தத்துவார்த்த சித்தாந்தப் போராட்டம் மற்றும் வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களை உக்கிரப்படுத்துவதன் மூலம் அவர்கள் மக்களைப் படிப்படியாக புரட்சிக்குப் பண்படுத்துகிறார்கள். இதனைச் செய்வதற்கு வேறு எந்த குறுக்குவழியும் இல்லை. ஆனால் இதற்கு நேர்எதிராக சி.பி.ஐ.(மாவோயிஸ்ட்) தலைமை பூர்ஷுவா வர்க்கத்தின் பாது காவலர்களின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க நடத்தப்படவேண்டிய தொடர்ச்சியான சித்தாந்தப் போராட்டம் மற்றும் வர்க்க, வெகுஜனப் போராட்டத்தின் அவசியத்தை நிராகரித்து தன்னெழுச்சிக் கொள்கையை முன்வைக்கிறது.

இவ்விடத்தில் இவ்விஷயம் குறித்து மாபெரும் மார்க்ஸிய தலைமை ஆசான்களின் போதனைகளை நினைவுகூர்வது மிகப் பொருத்தமானதாகும்.

1880களில் மார்க்ஸ் அவர்கள் ஏங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தில் '.......பயங்கரவாத ஆட்சி. இவ்வாட்சியை, பயங்கரவாதத்தை பரப்புவோரின் ஆட்சி என்று நினைக்கிறோம். மாறாக, இந்த ஆட்சி, தாங்களே பயத்தால் (பீதியால்) பீடிக்கப்பட்டோரின் ஆட்சியாகும். பயத்தால் பீடிக்கப்பட்டோர் தமக்குத் தாமே உறுதியளித்துக் கொள்வதற்கு பரப்பிவிடும் பயனற்ற கொடூரங்களைத் தான் பயங்கரவாதம் பெரும்பாலும் கொண்டுள்ளது' என்று எழுதுகிறார்.

லெனின் அவர்களின் கூற்றின்படி "பயங்கரவாதம் என்பது வெகுஜன இயக்கத்தைப் புரிந்து கொள்வதில் உள்ள தோல்வி மற்றும் அதன் மீதான நம்பிக்கைக் குறைவு என்பதே ஆகும்." 1880களில் ஜாரின் ரஷ்யாவில் நரோத்னிக்குகள் என்று அழைக்கப்பட்ட ஒரு குழுவினர் விவசாயிகள் மத்தியிலும் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும் புரட்சிகர வேலை செய்வதைக் கைவிட்டு ஜார் ஏதேச்சதிகாரத்தை வீழ்த்த தனிநபர் பயங்கரவாதச் செயல்கள் மூலம் தனிநபர்களைக் கொலை செய்யும் கொள்கைளைப் பின்பற்றினர். லெனின், ஒரு தீவிர சித்தாந்தப் போராட்டத்தின் மூலமாக நரோத்னிக்குகள் எவ்வாறு ஒட்டுமொத்த வர்க்கத்திற்கும் எதிரான போராட்டத்திலிருந்து தொழிலாளர்களின், விவசாயிகளின் கவனத்தை திசைமாற்றுகிறார்கள் எனக் காட்டினார். தொழிலாளிவர்க்கம், விவசாயிகளின் புரட்சிகர முன்முயற்சி செயல்பாடுகளுக்கு இடையூறு செய்து தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சி உருவாகும் செயல்முறைப் போக்கை அவர்களின் கொள்கை எவ்வாறு தடுக்கிறது என்று லெனின் தோலுரித்துக் காட்டினார்.

மேலும் அவர், வெகுஜன எழுச்சி காலப் பகுதியில் நடைபெறும் 'வன்முறை'யிலிருந்து மக்கள் ஆதரவு இல்லாத சாகசவாத தனிநபர் பயங்கரவாதத்தை தெளிவாக வேறுபடுத்திக் காட்டினார். மேலும் "எப்பொழுதெல்லாம் ஒரு கட்சி வெகுஜனங்களின் ஆதரவைப் பெறிருக்கவில்லையோ அப்பொழுதெல்லாம் அது தனிநபர் பயங்கரவாதத்திற்குச் செல்கிறது என்பதைத்தான் ரஷ்யப் புரட்சியின் வரலாறு காட்டுகிறது" என்றார்.

மேலும் இதனை விளக்கியுரைத்தபோது, அவர் "அராஜகவாதிகளின் தத்துவம் பூர்ஷுவா தத்துவத்தின் தலைகீழ் வடிவமே. அவர்களின் தனிநபர்வாத கருத்தியல்களும் குறிக்கோள்களும் சோசலிசத்திற்கு நேர்எதிரானது. அவர்களின் கருத்துக்கள் தடுக்கவியலாத சக்தியோடு உழைப்பை சமூகமயப்படுத்தி வளர்ந்துபெருகும் பூர்ஷுவா சமூகத்தின் எதிர்காலத்தைக் குறித்துச் சொல்லவில்லை. மாறாக நிகழ்கால மற்றும் இறந்தகால சமூகத்தைப் பற்றியும் சமூகமான தனித்தனியான சிதறிக்கிடக்கும் சிறு உற்பத்தியாளர்களின் வாழ்க்கையின் குருட்டுத்தனமான அதிர்ஷ்டத்தின் பங்கு ஆதிக்கத்தைப் பற்றி பேசுகிறது.......அரசியல் போராட்டத்தை ஏற்க மறுக்கும் நிலைக்குச் சென்று பாட்டாளிவர்க்கத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து அவர்களை பூர்ஷுவாக்களின் ஏதேனுமொரு கொள்கையினை ஏற்றுக் கொள்ளும் செயலற்ற பங்கெடுப்பாளர்களாக மாற்றுகிறது" (சோசலிசம் மற்றும் அராஜகவாதம்" தொகுப்பு நூல் தொகுதி 10 பக்கம் 73).

மேலும் அவர் கூறியதாவது, பயங்கரவாத விருப்பார்வம் என்பது துவக்கத்திலிருந்தே வர்க்கப் போராட்டத்தை நடத்தும் புரட்சிகரக் கட்சியாக மாறுவதற்கான முயற்சி ஏதுமின்றி பாட்டாளி வர்க்க இயக்கத்திலிருந்து தன்னை விலக்கிவைத்துக் கொள்வது அல்லது விலகுவது என்ற யதார்த்த நிலையோடு மிகவும் நெருக்கமாகத் தொடர்புடைய விஷயமாகும். ("புரட்சிகர சாகசவாதம் தொகுதி நூல் 6 பக்கம் 189) ஆகவே "பீதியூட்டுவதற்கான அழைப்புகள் யாவும் மிகமுக்கியமான (கடமையான)...... அனைத்து அம்சங்களிலும் அரசியல் கிளர்ச்சியை கட்டுவதை தவிர்ப்பதற்கான வெறும் வடிவங்களேயாகும்.... (என்ன செய்ய வேண்டும்? தேர்வு நூல் தொகுதி 2 பக்கம் 96–97). மேலும் அவர் தெளிவுபடுத்தியதென்னவெனில்..... "வேவுக்காரர்கள், ஏஜெண்டுகள், துரோகிகள், ஆகியோர்களை கொலை செய்தல் சில நேரங்களில் முழுவதுமாகத் தவிர்க்கவியலாததாக ஆகிவிடுகிறது ஆனால் அதையே முறையான திட்டமாக்குவது தவறானதாகும் என்பதை தொழிலாளர்களுக்குப் புரியவைக்க வேண்டும். "நமது ஸ்தாபனப் பணிகள் குறித்து ஒரு தோழருக்குக் கடிதம்" லெனின் தேர்வு நூல் தொகுதி 6, பக்கம் 245)

மேலும் ஒரு விஷயம் குறித்து அவர் மிகவும் தெளிவுபடுத்தினார் "அராஜகவாதத்திலிருந்து பல வற்றை கடன்வாங்கி தொடர்ந்த பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கு அவசியமான தேவைகள் மற்றும் நிலைமைகள் அனைத்திலும் குறைபாட்டுடன் இருந்து வந்த குட்டிமுதலாளித்துவப் புரட்சியாளர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட நீண்ட காலத் தொடர்ச்சியான போராட்ட இயக்கங்களில் வடிவெடுத்து உறுதிப்பட்டுத்தான் போல்ஷுவிசம் வளர்ந்தது" ("இடதுசாரி கம்யூனிசமும் இளம்பருவக் கோளாறும்" தேர்வு நூல் தொகுதி 10 பக்கம் 70).

இதனை மேலும் விரித்துரைத்து ஸ்டாலின் கூறியதாவது, மார்க்சிசமும் அராஜகவாதமும் முற்றிலும் வேறுபட்ட இருவேறு கோட்பாடுகளிலிருந்து கட்டப்பட்டவை...... அராஜகவாதத்தின் கருத்தியல் கூறுகளைப் பொறுத்தமட்டில் தனிநபர் விடுதலை சாதிக்கப்படாமல் வெகுஜனங்களின் விடுதலை சாத்தியமில்லை. அதற்கேற்றவாறு அதன் முழக்கம் 'அனைத்தும் தனிநபர்களுக்கே' என்பதாகும். மார்க்சியத்தின் மையக்கரு வெகுஜனங்கள்தான். அதன் கருத்தியல் கூறுகளைப் பொறுத்தமட்டில் வெகுஜனங்களின் விடுதலைதான் தனிநபர் விடுதலைக்கான முதன்மையான நிபந்தனையாகும். ஆகவேதான் மார்க்ஸிசம் வெகுஜனங்கள் விடுதலையடையாமல் தனிநபர் விடுதலை சாத்தியமில்லை என்கிறது. அதற்கேற்றவாறு அதன் முழக்கம் "அனைத்தும் வெகுஜனங்களுக்கே!" என்று அமைந்திருக்கிறது. (அராஜகவாதமா சோசலிஷமா? " தொகுப்பு நூல் 1 பக்கம் 299) இவ்வாறுதான் லெனினும் ஸ்டாலினும் தனிநபர்வாத பயங்கரவாதத்தையும் தனிநபர் அராஜகவாதத்தையும் கண்டித்ததுடன் அவைகள் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிராக எப்படிச் செயல்படுகின்றன என்பதையும் காட்டினர்.

லெனின், ஸ்டாலினைப் போலவே மாசேதுங்கும் கூட வர்க்கப்போராட்டம் என்ற பெயரில் பயங்கரவாதத்திற்கு வழுவிச் செல்வதற்கெதிராக எச்சரிக்கைவிடுத்தார். ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது "ஒழித்துக் கட்டும் யுத்தம்" என்று தான் குறிப்பிட்டு யாராலும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுவிடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு அவர் அன்றைய சீனாவின் குறிப்பிட்ட நிலைமையில் (எதிரியை) திட்டமிட்டு பலவீனப்படுத்துதல் என்ற இலக்கை அடைவதற்கான வழிமுறைகளை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகள்". அந்த அடிப்படையில் ஒழித்துக் கட்டும் யுத்தம் என்பது தொடர்ந்து பலவீனப்படுத்தும் யுத்தமாகும். ஒழித்துக்கட்டி எதிரியை பலவீனப்படுத்தும் வழிமுறையை முதன்மையாகப் பயன்படுத்தித்தான் சீனா நீண்டநெடிய யுத்தத்தை நடத்தவியலும். (நீண்ட நெடிய யுத்தம் குறித்து, தேர்வு நூல் தொகுதி 2 பக்கம் 174 – 175).

இவ்விடத்தில் ஒழித்துக்கட்டுதல் என்பது எதிரியின் கூலிப்படையை குறிப்பிடுகின்றதே அன்றி தனிநபர்களைக் குறிப்பிடவில்லை. புரட்சி யுத்தத்தை நடத்துகிறோம் என்ற பெயரில் தனிநபர் கொலை மற்றும் வன்முறைத் தூண்டலில் ஈடுபடும் மாவோயிஸ்ட்டுகள் தங்களின் நக்ஸலைட் முன்னோடிகளைப்போலவே மாசேதுங்கின் "துப்பாக்கி முனையிலிருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது" என்ற மேற்கோளை எடுத்துக்காட்டி தங்களின் பயங்கரவாத மற்றும் தனிநபர் கொலை நடவடிக்கைகளுக்கு நியாயத்தைக் கோருவார்கள். ஆனால் அவ்வாறான அவர்களின் செயல்பாடுகள் புரட்சிகர அரசியலை தவறாகப் புரிந்துகொண்டதைத்தான் காட்டுகிறது. பொதுவாக மார்க்சிச லெனினிசத்தை தரம்தாழ்த்தவும் குறிப்பாக மார்க்ஸிஸ்ட் அத்தாரிட்டியும் மாபெரும் பாட்டாளி வர்க்கத்தின் தலைவருமான மாசேதுங்கை தனிநபர் பயங்கர

தொடர்ச்சி 7ம் பக்கம்

# நீதித்துறை தனது வரம்பை மீறும்...

1ம் பக்கம் தொடர்ச்சி

### அடிப்படை உரிமைகளை ஏகபோகங்கள் தடுப்பதோடு, ஆளும் வர்க்கத்தின் அடிவருடியாக அரசை உருவாக்குகின்றனர்

சமீபத்திய காலங்களில் முதலாளித்துவ – ஏகாதிபத்திய உலகில், பாராளுமன்ற ஜனநாயகத்தை ஈன்றெடுத்த, அதோடு மேற்கூறிய அரசு அமைப்பின் கோட்பாடுகளை வலியுறுத்திய நாடுகளில் கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தின் மேலதிகாரத்தை இன்று பின்பற்றவில்லை. சரியோ தவறோ ஏதாவது ஒரு காரணத்தை கூறிக்கொண்டு பாராளுமன்ற மேலதிகாரம் குறைக்கப்படுகிறது. அதே நேரத்தில், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படாத நிர்வாகம் மற்றும் நீதித்துறை போன்ற அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் / சட்டமன்றங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதும் தலையிடுவதும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இது பாசிச போக்கின் வளர்ச்சி ஆகும். முதலாளித்துவ சமூக முன்னேற்றத்திற்கு இணையாக இந்த மாற்றம் சேர்ந்தே வளர்ந்து வருகிறது என்பதை மார்க்சிச – லெனினிச அணுகுமுறை தெளிவாகவும் எளிதாகவும் எடுத்துரைக்கிறது.

முதலாளித்துவம் அதன் சுதந்திரமான வர்த்தக அல்லது சுதந்திரமான போட்டி நிலையிலிருந்து வளர்ச்சியற்ற நிலைக்கு சென்ற போது சுதந்திரமான போட்டி பொருளாதாரம் ஏகபோக கட்டமாக வளர்ந்தபோது, மூலதனம் திடப்படுதலும் ஓரிடத்தில் குவிதலும் நடைபெற்றது. ஆளப்படுகிற பெரும்பான்மையினர் மேலும் மேலும் இழந்து பொருளாதாரமும் அதிலிருந்து உருவாகும் பொருளாதார அதிகாரமும் படிப்படியாக சிலரது கரங்களில், ஆளும் ஏகபோகங்களிடம், திடப்பட்டு குவிந்து வரும் அதே வேளையில் ஆளப்படும் பெரும்பாலானோர் வறுமைக்குள்ளாக்கப்பட்டு அதிகாரத்தை இழந்து வருகின்றனர். அதற்கு இணையாக, முதலாளித்துவ அரசுக்கும் ஏகபோகங்களுக்கும் சேவகம் புரியும் நிர்வாகம் மற்றும் நீதித்துறையின் கரங்களிலும் அதிகாரம் குவிந்து நிலைபெறத்தொடங்கியது, அதே நேரத்தில் ஒப்பீட்டளவில் மக்கள் அதிக அதிகாரம் படைத்துள்ள பாராளுமன்ற அமைப்பு சிறுமைபடுத்தப்பட்டது. படிப்படியாக ஏகபோகங்களுக்கு, ஆளும் வர்க்கத்திற்கு, முழுமையான சேவகராக அரசு மாறியது.

இதன் விளைவாக ஆரம்பத்தில், சுதந்திரமான போட்டி நாட்களில் பொதுமக்களின், ஆளப்படுவோரின், அடிப்படை உரிமைகளாகக் கருதப்பட்ட அனைத்தும் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. ஏகபோகமயமாதல் சமமின்மைக்கு இட்டுச் செல்கிறது; ஒரு சில ஏகபோகங்களின் கைகளில் வளமும் மூலதனமும் குவிதலானது இயற்கையாகவே சாமானிய மக்களை வறுமைக்குள்ளாக்குகிறது. சமமின்மை, பாரபட்சம், வறுமைக்கு ஆளாக்கப்படுதல் இவையனைத்தும் சேர்ந்து ஆளப்படுவோரிடம் கடுங்கோபத்தை உருவாக்குகிறது, கோபம் சில நேரங்களில் எதிர்ப்பாகவும் செல்கிறது; மேலும் மேலும் தங்களது கைகளில் அதிகாரங்களைக் குவித்து வரும் ஆட்சியாளர்கள் இயற்கையாகவே தங்களது ஆட்சிக்கு வரும் எந்தவொரு எதிர்ப்பையும் அச்சுறுத்தலையும் நசுக்கும் பொருட்டு ஆளப்படுவோரின் (மக்களின்) உரிமைகளை நசுக்குவதிலும் பறிப்பதிலும் ஈடுபடுகின்றனர். ஆக எந்தவொரு ஆட்சேபமும் எதிர்ப்பும் அடக்கி ஒடுக்கப்படுகின்றன; அரசின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற பெயரில் கருத்துத் தெரிவிக்கும் உரிமை பறிக்கப்படுகிறது. இது உண்மையான ஜனநாயகத்தையே மறுதலிப்பதாகும். அரசாங்கத்திற்கு எதிரான கருத்தையும்கூட சிந்திக்கவும் எழுதுவதற்குமான, சுதந்திரத்தை அதிகாரப்பகிர்வை ஜனநாயகம் வழங்க வேண்டும். ஆனால் தற்போது ஆட்சியாளர்களான முதலாளித்துவவாதிகளும் அவர்களுக்கு சேவை செய்வதற்காக அவர்களின் ஆசியோடு நடத்தப்படும் அரசாங்கங்களும் தங்களுக்கேற்ற அரசியலமைப்புச்சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்து ஏராளமான கறுப்புச் சட்டங்களை இயற்றுகின்றனர் அதோடு அடிப்படை உரிமைகளையும் தடுக்கின்றனர். மக்களிடமிருந்து எதிர்ப்பு வரும்போது அதன்மீது அரசாங்கம் அல்லது நிர்வாகம் இத்தகைய அடக்குமுறையை ஏவுவதில் தோல்வி அடையும்போதோ அல்லது அமலப்படுத்த அச்சப்படும்போதோ அவை இந்த மக்கள் விரோத சட்டங்களை செயல்படுத்துவதற்கு நீதிமன்றங்களை ஈடுபடுத்துவது தொடர்ந்து அதிகரித்துவருகிறது. எனவே நம்மைப்போன்ற ஒரு முதலாளித்துவ நாட்டில், 80 விழுக்காட்டிற்கும் அதிகமான மக்கள் வாழ்வதற்கான குறைந்த பட்ச அடிப்படைத் தேவைகள் கூட இல்லாமல் வாடிவருகையில், ஊதியமில்லா கட்டாய – விடுமுறை, கதவடைப்பு, ஆலை மூடல், நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் முதலாளித்துவ அமைப்பின் சந்தை இழப்பால் லட்சக்கணக்கான தினக்கூலிகளும் தொழிலாளர்களும் வேலையிழந்து வருகையில், தாங்கள் குறைந்தபட்சம் உயிரோடிருப்பதற்கு குறைந்தபட்ச ஆதாரமாக ஏதாவது ஒரு வேலை, அது எப்படிப்பட்டதாயினும், கிடைத்துவிடாதா என்று நகர்ப்புறங்களிலும் கிராமங்களிலுமுள்ள ஆயிரமாயிரம் தினக்கூலிகளும் மற்ற தொழிலாளர்களும் அலைந்து திரிகையில், கட்டமைப்பு வசதியில்லாமலும், தவறான நிர்வாகத்தாலும், இதயமற்றவர்களாலும் நிர்மூலமாக்கப்பட்ட பலிகடாவானவர்கள் எக்கச்சக்கமான மருத்துவ கட்டணம் செலுத்த முடியாததால் மருத்துவமனைகளிலேயே மரித்துவருகையில், பட்டினியாலும் ஊட்டச்சத்துக் குறைவாலும் ஏற்படும் சாவுகளும், வறுமையாலும், இன்னும் இதுபோன்ற பிற காரணங்களாலும் விவசாயிகளின் தற்கொலைகளும் அதிகரித்து வருகையில், இதனால் விளையும் கோபாவேசத்தால் மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தயாராகிவிட்ட நிலையில் அதை அடக்க அனைத்து அரசாங்கங்களும் முயற்சிக்கின்றன. அதில் தோல்வி அடையும் பொழுது ஏற்கனவே நீண்ட காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மக்களின் ஆயுதங்களான 'பந்த்' அல்லது பொது வேலைநிறுத்தம், ஏன் ஆர்ப்பாட்டங்களையும்கூட சட்டவிரோதம் என்று நீதிமன்றம் அறிவிப்பதை பார்க்கிறோம். இவ்வாறு 'பந்த்' – ஐ தடை செய்திருப்பதன் மூலம் தனிநபர் உரிமையை பந்த் பறிக்கிறது எனக் கூறி எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களின் உரிமையை அடக்கி பறிக்கிறது. இச்சுரண்டல் அடக்குமுறை அமைப்பிற்கு எதிராகப் போராடுவதற்கான மக்களது உரிமை பறிக்கப்படுவதன் உண்மையான நோக்கம் இன்னது தான் என்பதைக்கூட அறியமுடியாத அளவிற்கு பொதுமக்களின் அரசியல் தரம், அவர்களது அரசியல் விழிப்புணர்வு குறைவாக உள்ள நிலைமையில், நீதித்துறையின் இச்செயல் ஒரு நயவஞ்சக நடவடிக்கைதான். சட்டமன்றங்கள் நிர்வாகம் நீதித்துறை ஆகியவற்றின் வர்க்க குணாம்சத்தையும் மக்களுடைய உரிமையைப் பறிக்கும் இத்தகைய நடவடிக்கையின் காரணம் மிகவும் சிக்கலான நெருக்கடியிருக்கும் ஆளும் வர்க்கத்தை மீட்டெடுக்கத்தான் என்ற உண்மையையும் மூடிமறைக்கிறது.

### போராட்ட இயக்கங்கள் இல்லாத நிலையில் நீதிமன்றத்தை மட்டுமே நாடியிருப்பது மாயையை மட்டுமே ஏற்படுத்தும்

இந்த பின்னணியில், 'பொது நல வழக்குகள்' என்று அழைக்கப்படும் சில வழக்குகளை தற்போது நீதிமன்றம் அனுமதிக்கிறது. முதலாளித்துவ அமைப்பில் எந்தவொரு அரசாங்கமும், அது எந்த நிறமுடையதாயினும், மக்களின் கனவுகளை முறையாகவோ முழுமையாகவோ நிறைவேற்றும் என்றோ, அவர்களுடைய பிரச்சினைகளையும் துன்பதுயரங்களையும் போதுமான அளவிற்கு தீர்க்கும் என்றோ ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.மாறாக இப்பிரச்சினைகள் வரும்போது, அமைப்பானது மேலும் மேலும் நெருக்கடியில் சிக்கித்திணறும் போது, தங்களுடைய எஜமானர்களான, முதலாளித்துவ வர்க்கத்திற்கு கண்மூடித்தனமாக சேவகம் புரியும் அரசாங்கங்கள் மேலும் மேலும் மக்களுடைய நலன்களைக் காலிலிட்டு மூர்க்கத்தனமாக மிதிக்கின்றன. ஒழுக்கம், நேர்மை, வெளிப்படைத்தன்மை, பொது மக்களுக்குக் கடமைப்பட்டிருத்தல் போன்றவை எல்லாம் வேகமாக குறைந்து கடந்த காலமாகிவருகின்றன. அரசங்கத்தின் தரமும் பலமும் வேகமாக கீழே சரிந்து வருகின்றன. எனவே இயற்கையான போக்கிலேயே சமூக முரண்பாடுகளின் தவிர்க்க இயலா விதிகளைத் தொடர்ந்து மனத்தாங்கல்கள், கடுங்கோபமும் அரசாங்கத்திற்கு எதிராக மக்களிடையே ஆவேசமும் பெருகிவருகின்றன, இவையெல்லாம் சுரண்டல் அமைப்பிற்கு எதிரான அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளன.

ஆனாலும், போதுமான சக்தியுடைய உண்மையான புரட்சிகரத் தலைமையின் கீழ் சக்திவாய்ந்த வெகுஜன மற்றும் வர்க்கப் போராட்டங்கள் உருவெடுக்காத சூழ்நிலைமையில் பெரும்பாலும் கார்ப்பொரேட்டுகளின் பண உதவியோடு நடத்தப்படும் அரசாங்கம் சாரா அமைப்புகள் (NGO's) இந்த சூழ்நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, சில கோரிக்கைகளின் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து பரிகாரம் தேடும்படி மக்களை ஊக்கப்படுத்துகின்றனர். ஆனால் முதலாளித்துவ அரசின் வர்க்க அங்கமாக விளங்கும் நீதித்துறையும் மக்களின் வாழ்வில் உள்ள இந்த எரியும் பிரச்சினைகளைக் குறைத்திடாது. ஆளும் வர்க்கத்தின் அடிப்படை நலனைப் பாதிக்காத ஒன்றிரண்டு வழக்குகளில் வேண்டுமானால் அதிகபட்சம் சற்று சாதகமான தீர்ப்பை நீதிமன்றம் வழங்கலாம். ஆனால் முக்கியமாக ஊடகத்தின் சக்திவாய்ந்த தரப்பின் உதவியோடு தூண்டப்பட்டுள்ள இந்த அனைத்து பொது நல வழக்குகளும் தீர்வுக்காக நீதிமன்றங்களை அணுகலாம் என்ற மாயைக்குள் சாதுரியமாக மக்களை தள்ளுகிறது.

நீதித்துறை இந்த அனைத்துப் பொது நல வழக்குகளிலும் நிர்வாகம், மற்றும் சட்டமன்ற அதிகாரத்தைக் கூட கையிலெடுத்துக் கொண்டுள்ளது. இதற்கு முன்பு பல்வேறு தாவா வழக்குகளில் சட்ட வரம்பிற்குள் செயல்படுமாறு அரசாங்கத்தைப் பலமுறை கண்டித்த நீதிமன்றம் வெளிப்படையான சட்ட வழியைப் பின்பற்றும்படியும் அதற்கு அலோசனைகளை வழங்கியுள்ளது. ஆனால் தற்போது அது நேரடியாகவே நிர்வாகம் அல்லது சட்டமன்றத்தின் பணியில் ஈடுபடுகிறது. அதிகாரத்தை இவ்வாறு தவறாகக் கையிலெடுத்துக்கொள்வது ஜனநாயகத்தின் அடைப்படை கட்டமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தி அது ஜனநாயகத்தை அழிக்கின்றது. அதன்மூலம் அரசியலமைப்புச் சட்டத்தின் சர்வாதிகாரம் ஏற்படும் அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. ஆக ஜனநாயகத்தை ஈன்றெடுத்த அமைப்பே இன்று அதை தகர்ப்பவராகிவிட்டது.

'பந்த்' – ஐ சட்டவிரோதம் என்று நீதிமன்றம் அறிவித்த வழக்கை எடுத்துக்கொள்வோம். 'பந்த்' என்ற சொல்லுக்கு எந்த சட்ட வரையறையும் இல்லை. சட்ட ரீதியாகவோ அல்லது அரசியலமைப்புரீதியாகவோ அதற்குத் தடைவிதிக்க முடியாது என்பதே அதன் பொருள். ஆனாலும் கூட, சட்டத்தில் இடமில்லாத போதிலும் அதை சீராய்வு செய்து சட்டமியற்றி 'பந்த்' சட்ட விரோதம் என்று அறிவிக்கிறது. இது தன்னிச்சையான முடிவு இல்லையா? பூர்ஷ்வாக்களால் புனிதமானது என்று கருதப்பட்ட அதிகாரப் பகிர்வுக்கு எதிராக இது செல்லவில்லையா? ஆளப்படும் பெருவாரியான மக்களின் நலன்களுக்கு எதிராகவும், உண்மையான சமூக முன்னேற்றத்திற்கும் எதிராகவும் இப்படி சட்ட வரம்பை மீறி நீதிமன்றம் செல்லத் தொடங்கினால் அது எங்கு போய் முடியும் என்று திகைப்பை உண்டாக்குகிறது.

நீதிமன்ற வழிகாட்டுதல்களில் அல்லது தீர்ப்புகளில் மக்கள் – ஆதரவு அம்சம் ஏதேனும் இருந்தால் கூட, அவற்றை அமல்படுத்துவது அரசாங்கத்தின் நேர்மையைச் சார்ந்தே உள்ளது, அது நீதிமன்றத்தின் ஆலோசனைகளை எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்வது என்ற அதன் முடிவிலும், அதேபோல நிர்வாகம் அல்லது அதிகார இயந்திரத்தையும் சார்ந்தே உள்ளது. சுய அல்லது குழுவின் அற்ப நலனுக்காக ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள், நிர்வாகம், ஏன் நீதித்துறையையும் கூட என, ஒட்டுமொத்த அரசியல் களத்தையும் கணக்குவழக்கற்ற ஊழல், சதி, வெளிப்படைத் தன்மையின்மை போன்றவை கவ்வி இருக்கையில், ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செல்லும் எந்தவொரு மக்கள்–ஆதரவு நடவடிக்கையும் காற்றில் கரைந்து காணாமல் போய்விடும். இவ்வாறான தொடர் நிகழ்வுகளின் போக்கில் மற்ற அங்கங்களின் அதிகார வரம்பை ஆக்கிரமித்து தேவையைத் தாண்டிய அதிகாரத்தை நீதிமன்றம் பெற்று வருகிறது.

இது ஏதோ விதிவிலக்கு என்று ஒருபோதும் எடுத்துக் கொள்ள முடியாது. அதன் நோக்கம் மற்றும் வெளிப்படும் விதத்தைப் பார்த்தால் நீதித்துறையின் ஆதிக்கம் உயர்வதும்கூட வர்க்கத்தின் திட்டமே என்பது தெளிவாகப் புலப்படும். சட்டமன்றங்கள் மூலம் தங்களது திட்டங்கள் சிலவற்றை, அவற்றிற்கு பொதுமக்களின் ஆதரவு கிடைக்காது என்ற பயமில், அவற்றை அமல்படுத்த முடியாத நிலையில் ஆளும் ஏகபோகங்கள் நீதித்துறையைப் பயன்படுத்திக்கொள்கின்றனர். வர்க்கத்தின் சமிக்ஞை கிடைத்தவுடன், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, நிர்வாகத்தோடு சேர்ந்துகொண்டு, மக்கள்–விரோத நடவடிக்கைகளை நீதித்துறை நடைமுறைப்படுத்துகிறது. ஏகபோகங்கள் மேலும் மேலும் வலுவடைய அரசு மேலும் மேலும் ஏகபோகங்களின் அடிவருடி சேவகராகிறது, இத்தகைய நடவடிக்கைகள் பெருமளவில் அடிக்கடி நடைபெறும்போது சட்டமன்றங்களின் வரம்பிற்குள் மேலும் மேலும் நீதிமன்றம் தலையிடுகிறது.

இதன் போக்கில் விளைவாக, நாளாக நாளாக, சட்டமன்றம் அதன் முக்கியத்துவத்தை இழந்து வருகிறது. அது கடந்த காலத்தில் அனுபவித்துவந்த முக்கியத்துவத்வமும் இறையாண்மையும் பறிக்கப்படுகின்றன. அந்தக் காலங்களில் பல்வேறு பூர்ஷ்வா நாடுகளின் பாராளுமன்றங்கள் இடையிடையே சிறிது ஓய்வை மட்டும் எடுத்துக்கொண்டு தொடர்ச்சியான பல்வேறு அமர்வுகளை நடத்தி, பொது மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தின் முக்கியமான அனைத்துப் பிரச்சினைகளையும் விரிவாக விவாதித்தனர். ஏகபோகம் தன்னை நிலைநிறுத்திய உடன், முதலாளித்துவத்தின் நெருக்கடியும் ஆழமாகி விட்டது. சுரண்டப்படும் மக்கள் கோபத்தோடும் ஆவேசத்தோடும் போராடத் தொடங்கினர், கருத்தை வெளிப்படுத்துதல், எதிர்த்தல், போராட்டம் இன்ன பிற உரிமைகள் திரையிட்டு மறைக்கப்பட்டன. இதோடு கூடவே, பாராளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் நாட்களும் பெருமளவு குறைக்கப்பட்டன, அதனால் விவாதங்களுக்கான சந்தர்ப்பமும் சுருக்கப்பட்டது. ஒருபுறம் உரிமைகள் மறுக்கப்படுவதால் பாராளுமன்றத்திற்கு வெளியேயான போராட்டங்கள் குறைக்கின்றன; மறுபுறம் பாராளுமன்றத்தின்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# நீதித்துறை தனது வரம்பை மீறும்...

*5ம் பக்கம் தொடர்ச்சி*

மதிப்பைக் குறைத்தலானது போராடுதல் மற்றும் இயக்கம் கட்டும் வாய்ப்பை மக்களிடமிருந்து மேலும் பறிக்கிறது. மாறாக, நிர்வாகத்திலும் அரசாங்கத்திலும் நிர்வாகதிகார ஆதிக்கம், மீண்டும் மீண்டும் தலைதூக்குவது வெளிப்படுகிறது. விதிகளை–உருவாக்குதல் என்ற பெயரில் நிர்வாகம் அல்லது நீதித்துறை போன்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அங்கங்களும் சட்டம் இயற்றுவதில் இறங்கிவிட்டன, எனவே ஆளும் வர்க்கத்திற்குச் சேவகம் செய்வதற்கு உகந்த சில தனிநபர்களிடம், பிரதிநிதிகளிடம் அதிகாரம் குவியத் தொடங்கியுள்ளது. இதுதான் ஜனநாயகத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய பாசிசத்திற்கான களத்தை உருவாக்குகிறது.

மேலே குறிப்பிட்ட சூழ்நிலைமைகள், சிற்சில வேறுபாடுகளுடன், அனைத்து முதலாளித்துவ – ஏகாதிபத்திய உலகிலும் நிலவுகிறது. இந்தியாவிலும் கூட, சட்டமியற்றும் மன்றங்களின் வரம்பிற்குள் நீதித்துறை மூக்கை நுழைப்பது தலையிடுவது போன்ற தேவையற்ற சம்பவங்கள் நடைபெறுவது அதிகரித்து வருகிறது. இந்தப் பெருகிவரும் அபாயம் குறித்து சரியாக சிந்திக்கும் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக நீண்டகாலமாக எமது கட்சி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. எங்களுடைய தொடர் விடாமுயற்சிகளையும் சில தனித்த கட்டுரைகளையும் தவிர, சட்டமன்றத்தை, பாராளுமன்ற ஜனநாயகத்தையே இப்படி மதிப்பிழக்கச் செய்வதைப் பற்றி பெரிய அரசியல்கட்சிகளிடம் எந்தவொரு சலனமும் இல்லை. இந்த அரைகுறை பாராளுமன்ற அமைப்பிற்குள் எவ்வளவு அதிகாரத்தையும் வசதிகளையும் பெறமுடியுமோ அதைப் பெறுவதற்கான போட்டியில் பங்கேற்பதிலேயே அவர்கள் குறியாக உள்ளனர். உழைக்கும் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களது வாழ்வின் பற்றி எரியும் பிரச்சினைகள் மீது போராட்ட இயக்கங்களைக் கட்டியெழுப்பி படிப்படியாக வளர்த்தெடுத்து நீண்ட நெடிய போராட்டத்தை நடத்தவேண்டிய அவசியம் இருக்கையில் கம்யூனிஸ்டுகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் சிபிஐ(எம்), சிபிஐ போன்ற போலி–மார்க்சிய கட்சிகளும்கூட நீண்டகாலமாகவே போராட்டப்பாதையை விட்டு விலகிவிட்டனர். எமது கட்சி தன்னந்தனியாக முயற்சி செய்தாலும் அது நாட்டில் ஒரு வலுவான ஜனநாயக மாற்று சக்தியாக இன்னும் வளரவில்லை.

### அரசியல் குற்றமயமாதல்

இத்தகைய பின்னணியில், சமீபத்தில் நமது நாட்டின் உச்ச நீதிமன்றம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. அரசியல் செயல்பாடுகளில் அரசியல் குற்றமயமாதல் என்பது புற்றுநோய் போல் பரவி வருகிறது. பாராளுமன்ற ஜனநாயகம் உருவெடுத்த நாட்களில், சில பத்தாண்டுகளுக்கு முன்புகூட, உள்ளாட்சி, பிராந்தியம் அல்லது தேசிய என அனைத்து மட்டங்களிலான பூர்ஷ்வா தேர்தல்களிலும் அதில் பங்கேற்போரின் கருத்து ரீதியான– விவாதங்கள் – கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறும் சூழல் இருந்தது. அந்தக் கட்சிகள் தங்களது பார்வைகள், சிந்தனைகள், தத்துவங்கள் மற்றும் திட்டங்களை விரிவாகத் தங்களது தேர்தல் அறிக்கைகள் மூலம் வாக்காளர்களுக்கு விளக்கியுரைத்து அதிலிருந்து தங்களை சீர்தூக்கிப் பார்த்து தேர்வு செய்யும்படி கேட்டுக்கொள்வர். இன்று அதற்கு மாறாக, பணம், பலம் மற்றும் ஊடகம் என்ற மூன்று சக்திகளின் விளையாட்டாக தேர்தல் மாறிவிட்டது. ஒவ்வொருநாளும், தேர்தல் நடைமுறைகளில் சீரழிவு மேலும் மேலும் உக்கிரமாகவும் அப்பட்டமாகவும் ஆகிவருகிறது. தேர்தல் பிரச்சாரங்கள் ஜாதி, இனம், மொழி, வெறித்தனம் ஆகியவற்றினால் ரத்தம்–சிந்தும் சகோதர மோதல் களம் என்பதாக சிறுமைப்படுத்தப்பட்டுவிட்டது; இவை குறைவாக உள்ள இடங்களில், ஆயுதம் தாங்கிய ரௌடி கும்பல்கள் போட்டியிடும் வெவ்வேறு கட்சிகளுக்கு ஆதரவாக வெளிப்படையாகத் திரிவதோடு தேர்தலில் உண்மையான வாக்காளர்களைப் பங்கேற்கவிடாமல் தடுப்பதற்காக அச்சுறுத்தும் வன்முறை வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். அடுத்தது பணபலம், அது எதற்கும் குறைந்ததல்ல. கார்ப்பொரேட் குழுமங்கள், பல்வேறு தரப்புகள், அதோடு சமூகத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பவர்கள் எல்லோரும் சேர்ந்து குண்டர்களை இறக்குவதற்காகவும், வாக்காளர்களைக் கவர்வதற்காக இலவசங்களை, அதாவது அனாவசியமான பரிசுகள், பட்டினி கிடப்பவர்களுக்கு உணவு, அனைவருக்கும் மதுபாட்டில்கள், வறியவர்களுக்கு உபகரணப் பொருட்களையும் கூட, கொடுப்பதற்கும் பணத்தை வாரி இறைக்கின்றனர். ஆளும் வர்க்கத்திற்கு அல்லது அதன் ஏதேனும் ஒரு பிரிவுக்கு நம்பகத்தன்மையுடைவர்கள், அடிவருடி சேவகம் செய்யும் முகவர்கள் என்று தங்களை நன்கு நிரூபித்த தனிநபர்கள் உள்ளிட்ட சக்திகள் மற்றும் அரசியல் கட்சிகளைத்தான் ஊடகங்களும் திட்டமிட்டு முன்னிலைப்படுத்தும் பிரச்சாரத்தை மேற்கொள்கின்றனர். நாட்டில் இரு கட்சி ஆட்சி அமைப்பு முறையைக் கொண்டுவர ஆளும் வர்க்கம் விரும்புகிறது. அந்த திட்டத்திற்கு உகந்த பூர்ஷ்வா – குட்டிபூர்ஷ்வா கட்சிகள் மட்டுமே அதிகாரத்திற்கான போட்டியில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இது முன்கூட்டியே திட்டநிரல்கள் நிரப்பப்பட்ட கணினிக்குள் தரவுகளைக் கொடுத்து அதிலிருந்து பிரிண்ட்டவுட் எடுப்பது போலத்தான் தேர்தல் முடிவுகளும் உள்ளன.

இப்படி நடைபெறக்கூடிய இன்றைய தேர்தல்களில் பங்கெடுப்பதிலிருந்து நல்லவர்கள் விலகிச் செல்வது அதிகரித்து வருகிறது. யார் மக்களை மிரட்டுகிறார்களோ, தங்களது பார்வையால், நடத்தையால், செயல்களால் மக்களை யார் பயமுறுத்துகிறார்களோ, நாசூக்காக மக்களை நிர்ப்பந்திப்பவர்களை, மீண்டும் மீண்டும் குற்றச்செயல் புரிந்தவர்களை, பித்தலாட்டம், பலகோடி ஊழல், ஏன் கொலை வழக்குகளிலும் கூட தண்டனை பெற்றவர்கள் என இவர்களிலிருந்துதான் தங்களது வேட்பாளர்களை பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வா கட்சிகள் தேர்வு செய்கின்றன. இப்படி இந்தியாவில் **2009**ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி. க்களில், **30** பேரில் ஒருவர் கொலை அல்லது இதுபோன்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவராக இருக்கின்றார். **23** பேரில் ஒருவர் கொலை முயற்சி வழக்கிலும், **54** பேரில் ஒருவர் ஆட்கடத்தல் வழக்கிலும், **54** பேரில் ஒருவர் கொள்ளை வழக்கிலும், **54** பேரில் ஒருவர் கலவரத்தை நடத்திய வழக்கிலும் சிக்கியவர்களாவர். இந்த குற்றவாளிகள் எல்லாம் தங்களது எஜமானர்களுக்கு சேவைசெய்வதை உத்திரவாதப்படுத்துவதற்காக சக்திவாய்ந்த அமைச்சர்களாகவும் ஆகிவிடுகின்றனர் மிக முக்கியமான துறைகளையும் பெற்றுவிடுகின்றனர் அதோடு அவர்களுடைய பல தலைமுறைகளுக்குத் தேவையான அதிகாரத்தையும் சொத்துக்களையும் குவித்து விடுகின்றனர். இவர்களெல்லாம் தாம் சார்ந்துள்ள கட்சிகளின் சொத்துக்களாக மாறுகின்றனர். அவர்கள் ஆள்பலம் மற்றும் பணபலத்தைப் பயன்படுத்தி வாக்காளர்களை பீதியுறச்செய்து எப்படியாவது அதிக இடங்களைக் கைப்பற்றும் வன்முறைக் களியாட்டத்திற்கு அக்கட்சிகளால் பயன்படுத்தப்படுகின்றனர். ஆளும் வட்டங்களும் அவர்களின் பிரச்சார அங்கமான ஊடகங்களும்கூட இதை கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாத அளவிற்கு மக்களிடையே கொந்தளிப்பான சூழ்நிலைமை நிலவுகிறது. இந்தப் பிரச்சினை கொழுந்துவிட்டு எரியும் வரை வருடக்கணக்கில் அது பற்றி வாய் திறக்காமல் ஆளுவோர் மௌனமாய் இருந்தனர், தூண்டியும் விட்டனர். இன்று அது பெருங்கேட்டினை விளைவிக்கும் அச்சுறுத்தும் நிலைமைக்குச் சென்றுவிட்டபடியால் அவர்கள் 'தேர்தல் சீர்திருத்தம்' மற்றும் 'தேர்தல் களத்தில் குற்றப் பின்னணி உள்ளவர்களைத் தடுப்பது' என்று கூக்குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர். குற்றப்பின்னணி உடையவர்களை சுதந்திரமாக விளையாடவிடாமல் தடுப்பது என்ற அவர்கள் அறிவித்த குறிக்கோளை அவர்களால் அடைய முடியவில்லை. முதலாளித்துவ அமைப்பு உறுதிப்படுத்தப்படும் ஒவ்வொரு கணமும், ஏகபோகம் வலுவடைகிறது, பூர்ஷ்வா அரசியலும் மேலும் மேலும் குற்றவாளிகளைச் சார்ந்திருக்கத் தொடங்குகிறது, இந்த முதலாளித்துவ அமைப்பையும் அதன் ஆட்சியையும் பாதுகாப்பதற்காக அது அரசியல் களத்திற்குள் கிரிமினல்களையும் குற்றச் செயல்பாடுகளையும் அழைத்து வருகிறது. சில சந்தர்ப்பங்களில், பொதுமக்கள் மத்தியில் நிலவும் கடுமையான அதிருப்தியினால், ஆளும் வர்க்கமும் நீதித்துறையும் ஒரு அரசியல்வாதி செய்த கடுமையான குற்றச் செயல்களை கண்டுகொள்ளாமல் இருக்க முடிவதில்லை. ஆனால் அப்போதும்கூட அவர் பதவியில் இருப்பதை பாதிக்காத வகையில் அதை மிகுந்த கவனத்தோடு நயவஞ்சகத்தோடு விசாரணையை நீண்ட காலம், கிட்டத்தட்ட குறைந்தது **15** முதல் **20** ஆண்டுகள் வரை, இழுத்தடித்து அவரது பிரதான வாழ்நாள் காலத்தைப் பாதிக்காத வகையில் பார்த்துக்கொள்கின்றனர். மாறாக, ஒரு புரட்சிகர கட்சியை பாராளுமன்ற அரசியல் களத்தினுள் வரவிடாமல் வைத்திருப்பதற்கு எந்த அளவிற்கு முழுமூச்சாக முதலாளித்துவ வர்க்கம் தொடர்ந்து முயற்சித்து வருகிறது என்பதையும் சொல்லாமல் விடமுடியாது. எந்தவித சட்ட நியதிகளையும் பின்பற்றாமல், அது புரட்சிகர கட்சித் தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது எந்தவித ஆதாரமும் இன்றி சப்பை காரணங்களுக்காக பொய்வழக்குகளைத் தொடுத்து கடுமையான தண்டனைகளையும் தயக்கமின்றி வழங்குகிறது. இதைச் செய்வதற்கு காரணகர்த்தாவாக விளங்குவது யார்? நீதித்துறைதான், இன்று அதுவும் ஊழல் புகார்களுக்கு ஆளாகியுள்ளது, சில குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் கூட ஊழல் புகார்களுக்கு ஆளாகியுள்ளனர்.

### கிரிமினல்மயமாதல் மீதான சமீபத்திய தீர்ப்பு உண்மையான பிரச்சினையைத் தொடப்போவதில்லை

இத்தகைய சூழ்நிலையில், ஜுலை **2013**ல் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. விசாரணை நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்ட உடனேயே எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் தகுதி இழப்பர் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பாராளுமன்றம் அதன் அதிகார வரம்பை மீறியுள்ளது என்று விமர்சித்துள்ள நீதிமன்றம், தண்டனை பெற்ற எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்களை மேல் நீதிமன்றத்தில் மூன்று மாதத்திற்குள் மேல்முறையீடு செய்திருந்தால் அதன் அடிப்படையில் பதவியிழப்பதிலிருந்து அவரைப் பாதுகாக்கும் மக்கள் பிரநிதித்துவச் சட்டம், **1951**ன் பிரிவு **8(4)**ஐ ரத்து செய்துள்ளது. ஆனால் எந்த அரசியலமைப்பு ஷரத்து பாராளுமன்றத்தால் மீறப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு சுட்டிக் காட்டாமல் பொத்தாம் பொதுவாக அதன் அதிகார வரம்பை மீறிவிட்டது என்று பாராளுமன்றத்தைக் குற்றம் சுமத்தியுள்ளது. இதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறதா என்ற சந்தேகத்தை இச்செயல் எழுப்பியுள்ளது. ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்டு மேல் நீதிமன்றங்களில் மேல்முறையீடு செய்துள்ள தற்போது பதவியிலிருக்கும் எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்களுக்கு இந்தத் தீர்ப்பு பொருந்தாது என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆனால் இந்தத் தீர்ப்பிற்குப் பின்னர் தண்டிக்கப்படுவோர் இந்த ஷரத்தால் பாதுகாக்கப்பட மாட்டார்கள். இந்திய அரசியலை தூய்மைப்படுத்துவதற்கான மிகப்பெரிய படி என்று இந்தத் தீர்ப்பை சில ஊடகங்கள் வர்ணித்தாலும், உண்மையில் இது அப்பட்டமான அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான நடவடிக்கையே ஆகும். கிரிமினல் சக்திகளின் அபாயத்திலிருந்து இந்திய தேர்தல் அமைப்பைப் பாதுகாக்கவேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் கவலை நியாயமானதுதான். அதே நேரத்தில் மேல் முறையீடு செய்து தீர்ப்புக்குத் தடை ஆணை பெறும் உரிமையும் நீதி பரிபாலன அமைப்பின் பிரிக்க முடியாத அங்கம் என்பதையும் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். இதை நீதிமன்றம் எப்படி மறுக்கவோ ரத்து செய்யவோ முடியும்? அதோடு, எதிர்கட்சிகள் மீது பொய் வழக்குகள் போடும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. ஆளும் வர்க்கமோ புரட்சிகர சக்திகள் பாராளுமன்ற களத்தினுள் வருவதை எப்படியேனும் தடுத்திடவேண்டும் என்று கங்கனம் கட்டி வருகிறது. இந்த சூழலில், இந்த உத்தரவு புரட்சிகர தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது பொய் வழக்குகளில் சிக்கவைப்பதற்கும் அவர்களை பாராளுமன்ற களத்தினுள் நுழையவிடாமல் தடுப்பதற்குமே உதவும். **90%** மக்களின் பிரச்சினைகளுக்காக உண்மையிலேயே போராடும் இத்தகைய பிரதிநிதிகளை பொதுமக்கள் சட்டமியற்றும் மன்றங்களுக்கு அனுப்புவதை இது தடுத்து விடும். எனவே மேல் முறையீடு செய்யும் உரிமையை மறுக்கமுடியாது, மறுக்கவும் கூடாது. பதவியிலிருக்கும் எம்.பி., எம்.எல்.ஏ., அல்லது அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தடை ஆணை ஏதேனும் இருந்தால் அவ்வழக்குகளை இயன்றவரை துரிதமாக விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும்.

சட்டமன்றங்களை நீதித்துறை மீறும் மற்றொரு சம்பவம் சமீபத்தில் நடந்துள்ளது. வாக்கு இயந்திரத்தில் 'போட்டியிடும் யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை' என்பதை சேர்க்கவேண்டும் என்ற உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. திரும்ப அழைக்கும் உரிமை இல்லாமல், ஆளும் அமைப்பே அரசியலை குற்றமயமாக்குகையில் இத்தகைய நடவடிக்கைகள் தேர்தல்களில் கிரிமினல்கள் நுழைவதையோ வெற்றி பெறுவதையோ தடுக்க உதவாது, அதன்மூலம் அந்த வசதி ஒரு 'பிரயோஜனமில்லாத ஒன்றாகவே' இருக்கும்.

எம்.பி., மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அதன் மீதான விசாரணையை **6** மாத காலத்திற்குள் நிறைவு செய்தால் மட்டுமே அவர்களைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவேண்டும் என்று மற்றொரு பொது நல வழக்கின் மீது சமீபத்தில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரச்சினையின் ஆணிவேர் களைந்திட எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் தீர்வுகளைச் சொல்வதற்கு இது மற்றுமொரு உதாரணமாகும். அற்ப சொந்த மற்றும் அரசியல் நலன்களுக்காக பணபலம், அல்லது அரசியல் பலம் அல்லது வேறுசில அதிகாரங்களைப் பயன்படுத்தி எந்த ஒரு தனிநபர் மீதும் தவறான வழக்குகளை நீதிமன்றத்திலே கூடப் பதிவு செய்துவிட முடியும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமாகும். ஒரு வலுவான எதிரியை சிக்கலில் மாட்டுவதற்காக ஆளும் கட்சி விரும்பாது என்றோ ஆளும்கட்சியின் அரசியலை ஒரு எதிர்கட்சி முழு பலத்துடன் எதிர்க்கும் போது இந்த ஷரத்தைப் பயன்படுத்தி அதை ஆளும்கட்சி தேர்தல் களத்திற்குள்ளேயே வரவிடாமல் தடுக்காது என்பதற்கோ என்ன உத்தரவாதம்?

தொடர்ச்சி 8ம் பக்கம்

# தனிநபர் கொலை அடிப்படையிலான அரசியல்...

4ம் பக்கம் தொடர்ச்சி

வாதத்தை, தனிநபர் கொலைகளை ஆதரிப்பவ ராகவும், அத்தகைய கொள்கையை உருவாக்கித் தந்தவர் போன்றும் காட்ட நினைக்கின்ற பிற்போக்கு, சுயநல சக்திகளுக்கு இடமளிக்கிறது என்பது பற்றி ஒரு போதும் அவர்கள் சிந்திப்பதில்லை.

புரட்சிக்கு முந்தைய சீனாவின் தனிச்சிறப்பான நிலைமையில், மாசேதுங்....." நிலப்பிரபுத்துவ பிரிவினை கொண்ட சீனாவில் யார் அதிக ஆயுதங் களை வைத்திருக்கிறார்களோ அவர்களே அதிக அதிகாரத்தையும் கொண்டிருக்கிறார்கள். இவ் வாறான சூழ்நிலைமையில் இருக்க நேரும் பாட்டாளி வர்க்கத்தின் கட்சி பிரச்சினையின் சாராம்சத்தை தெளிவாகக் கண்டுகொள்ள வேண்டும்" என்பதை எடுத்துக்காட்டினார். ஆகவே, "ஆயுதப் போராட்ட மின்றி பாட்டாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் சீனாவில் நிலைத்திருக்க முடியாது. மேலும் அது எந்தப் புரட்சிகர பணிகளையும் சாதிக்கவியலாது." (தேர்வு நூல் தொகுதி 2, பக்கம் 222–24) என்றார்.

ஆனால் அவரின் இந்தக் கருத்து என்பது சரி யான புரட்சிகர சிந்தாந்தத்தினால் உணர்வூட்டப் பட்ட மக்கள்தான் புரட்சிகர யுத்தத்தில் சக்தி வாய்ந்த ஆயுதமாக செயலாற்றுகிறார்கள் என்ற உண்மையை மறுதலித்ததிலிருந்து பெறப்பட்டதா? இக்கேள்விக்கு மாசேதுங் அவர்களே விளக்கம் தருகிறார். "...ஆயுதபலமே அனைத்தையும் தீர் மானிக்கிறது' என்பது எந்திரகதியிலான அணுகு முறையாகும்... ஆயுதங்கள் யுத்தத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன ஆனால் அது தீர்மானகரமான காரணியல்ல மாறாக, பொருட்கள் அல்ல மக்கள் தான் தீர்மானகரமான காரணியாகும். மோதல், பலப்பரிட்சை என்பது இராணுவ மற்றும் பொருளா தார சக்திகளுக்கிடையிலானது மட்டுமல்ல மாறாக, மனிதசக்தி மற்றும் மனித மனவெழுச்சிக்கிடை யிலான மோதலும் பலப்பரிட்சையும் ஆகும். ("நீண்ட நெடிய யுத்தம் குறித்து" தேர்வு நூல் தொகுதி 2 பக்கம் 143).

### முதிர்ச்சியுறாத சூழ்நிலையில் புரட்சிகர எழுச்சிக்கான அறைகூவல்

இங்கே முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய மற்றுமொரு அம்சம் புரட்சிக்கான அறைகூவல் விடுக்கப்படுகின்ற தருணம் அதாவது காலப் பொருத்தம் பற்றியது. நாம் இதுவரையில் சுட்டிக் காண்பித்தது போல அகவயப்பட்ட மற்றும் புறவயப் பட்ட நிலைமைகள் கனிந்து வரும்போதுதான் புரட்சி நடைபெற முடியும். அவ்வாறு நிலைமைகள் கனி வதற்கு முன்னமே விடுக்கப்படும் புரட்சிக்கான அறைகூவல் சாகசவாதத்தில் மூழ்கடிப்பதோடு தயார்படுத்தப்படாத வெகுஜனங்களை பிற்போக்கு ஓநாய்களின் பசிக்கு இரையாக்குவதாகி விடும்.

ஆகவே தான் லெனின் "பாட்டாளி வர்க்க முன்னணிப்படையை மட்டுமே கொண்டு வெற்றி சாதிக்கப்பட முடியாது. பரந்துபட்ட வெகுஜனங்கள் நேரடியாக பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையை ஆதரிக்கும் நிலையில் அல்லது குறைந்த பட்சம் ஒரு நடுநிலை வகிக்கும் நிலையில் அல்லது எவ்வகையிலும் அவர்கள் எதிரிக்கு ஆதரவளிக்க சாத்தியமற்ற நிலையில் இருக்கும் முன்பாக ஒட்டு மொத்த (ஆளும்) வர்க்கத்தின் முன்பு பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையை தன்னந்தனியாக இறுதிக்கட்ட யுத்தத்தில் இறக்குவது மடத்தனமான செயல் என்பது மட்டுமல்ல அது குற்றமும் ஆகும். இதற்கு வெகுஜனங்கள் தங்களுக்கான அரசியல் அனுபவத்தைப் பெற்றிருக்கவேண்டும்" என்றார். (இடதுசாரி கம்யூனிசமும் இளம்பருவக்கோளாறும்–லெனின்). மாசேதுங் அவர்களும்கூட புரட்சியை நடத்த கட்சி முடிவுசெய்து விடுவதால் மட்டுமே புரட்சி நடைபெற்றுவிடாது என்பது குறித்து கவனத் துடன் இருந்தார். ஆகையினால் தான் அவர் "சில தோழர்கள், புறவயப்பட்ட மற்றும் அகவயப்பட்ட நிலைமைகளை புறக்கணித்து அவசரகதி புரட்சி என்ற நோய்க்கு ஆட்படுகின்றனர். அவர்கள் வெகு ஜனங்களிடத்தில் மிக நுட்பமான விவரங்களுடன் பணியாற்றும் சிரமத்தை ஏற்க மறுக்கிறார்கள். பொய் யான கற்பனைக்கு ஆட்பட்டு பெரிய காரியத்தைச் செய்வதை மட்டுமே விரும்புகிறார்கள். இது புட்சி சத்தின் மிச்ச சொச்சமாகும். (புட்சிசம் என்பது ஒரு சிறு பகுதி வெகுஜனங்களை நம்பி பகுதி அளவில் தொடர்ச்சியான கிளர்ச்சிகளை நடத்திக் கொண் டிருப்பது. தேர்வுநூல் தொகுதி 2, பக்கம் 107).

மேலும் அவர் இதனை தெளிவுபடுத்தி..." வெகு ஜனங்கள் எழுச்சியூட்டப்படாத நிலையில் தாக்கு தலுக்குச் செல்ல முயன்றால் அது சாகசவாதம். மக்களை வழிநடத்துவதில் அவர்களின் விருப்பத் திற்கு விரோதமாக ஏதேனும் செய்ய வலியுறுத்தப் பட்டால் அதில் நாம் நிச்சயமாகத் தோல்வியடை வோம். மக்கள் முன்னேறிச்செல்ல விரும்பும்போது நாம் முன்னேறிச் செல்லவில்லையெனில் அது வலதுசாரி சந்தர்ப்பவாதமாகும் என்றார். (சான்சியூவான் டெய்லி பத்திரிகை ஆசிரியர் குழு கூட்டத்தில் ஆற்றிய உரை, தேர்வு நூல் தொகுதி 2 பக்கம் 243)

மேலும் அவர் "ஒரு மனிதன் தனது பணியில் வெற்றிபெற விரும்பினால் .....தான் எதிர்பார்த்த விளைவுகளைப் பெற விரும்பினால் அவர் புற யதார்த்த உலகின் விதிகளுடன் பொருந்திப் போகின்ற சிந்தனையை அவர் கொண்டிருக்க வேண்டும். அவரின் சிந்தனை அவ்வாறு பொருந்த வில்லையெனில் அவர் தனது நடைமுறையில் தோல்வியுறுவார். அவ்வாறு தோல்வியுற்றபின்பு அவர் அதிலிருந்து பாடங்களைப் பெற்றுக் கொண்டு தனது சிந்தனைகளை புறயதார்த்த விதிகளுக்குப் பொருந்துகிற வகையில் மாற்றி சரிசெய்து கொள்ள வேண்டும் அதன்பிறகு அவரால் தோல்வியை வெற்றியாக மாற்றிவிடமுடியும்" ("நடைமுறை குறித்து" தேர்வு நூல் தொகுதி 1 பக்கம் 296–97).

எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்) ஸ்தாபகப் பொதுச் செயலாளரும், தலைசிறந்த மார்க்சிய சிந்தனை யாளரும், மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மசேதுங் ஆகியோரின் மதிப்புமிக்க வழித்தோன்றலு மான தோழர் சிப்தாஸ்கோஷ் அவர்கள் நக்சலைட் களின் கருத்தியலடிப்படையிலான தவறைச் சுட்டிக் காண்பிக்கிறபோது "நக்ஸலைட்டுகள் புரட்சி என்ற பெயரில் உண்மையில் என்ன செய்துகொண்டிருக் கிறார்கள்..... மாசேதுங் சிந்தனைகள் என்று எதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்...... சாராம்சத்தில் இவையனைத்தும் மிகச்சிரமம் மிகுந்த சித்தாந்த–அரசியல் போராட்டத்தை நடத்தும் தவிர்க்கவியலாத தேவையை ஆணித்தரமாக மறுதலிக்கின்றன...... புரட்சியாளர்கள் துணிச்சலான தனிநபர் பயங்கர வாத செயல்களில் ஈடுபட்டால் அவை மக்களை புரட்சியை நோக்கி ஈர்க்கும். அதனால் புரட்சிகர ஸ்தாபனம் தானாகவே வளர்ச்சிபெறும் என்கி றார்கள் ... ஆனால் இவையெல்லாம் மாசேதுங் சிந்தனைகளோடு எவ்விதத்திலும் தொடர் புடையவை அல்ல ......மாறாக இந்த கருத்தியல்கள் அனைத்தும் மார்க்ஸிய–லெனினிய மாசேதுங் சிந்தனைகளுக்கு முற்றிலும் விரோதமானவை யாகும்... மாவோவின் போதனைகளுக்கு எவ்விதத் திலும் தொடர்பற்ற ஒன்றை வைத்துக்கொண்டு மாவோவின் பெயரால் இவர்கள் செய்துவரும் நடவடிக்கைகளால்... அவர்கள் அரசியல் விழிப் புணர்வற்ற, விஷயம் அறியாத அப்பாவி மக்களி டத்தில் மாசேதுங் போன்ற மாபெரும் தலைவரின் பெருமையை சீர்குலைக்கிறார்கள்" (தொகுப்பு நூல் தொகுதி 2 பக்கம் 246–47).

மிகவும் வருந்தத்தக்க வகையில், இதற்கு முந்தைய நக்சலைட் தலைவர்களைப் போலவே தற்போதைய சி.பி.ஐ (மாவோயிஸ்ட்) தலைமையும் இந்த மதிப்புமிக்க போதனைகளை உட்கிரகித்துக் கொள்ள எந்த அடையாளமும் காட்டாமல் தனிநபர் கொலைகள் மற்றும் பீதியூட்டும் செயல்களைப் பரப்புதல் என்ற தங்களது நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### கேடுமிகுந்த விளைவுகள்

இதன் விளைவுகளால் மிகுந்த அபாயங்கள் நடக்கவிருக்கின்றன. ஒருபுறத்தில் குறுகிய இனவாத–வகுப்புவாத–பிளவுவாதிகளாக இருக்கின்ற பூர்ஷுவா வர்க்கத்தின் சக்திகள் அல்லது பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களுக்கு அடிபணிந்து சேவை செய்யும் சக்திகள் பல்வேறுபட்ட இன்னலுறும் மக்கள் பகுதியினரிடையே பீதியூட்டி பரஸ்பரம் நம்பிக்கை யின்மையையும் இணக்கமின்மையையும் ஏற்படுத்தி வருகிறார்கள். மறுபுறத்தில் சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்) தலைமையானது ஒன்றுக்கொன்று தொடர்பற்ற வன்முறைகளையும், குண்டுவெடிப்புகளையும், தனி நபர் கொலைகளையும் திட்டமிட்டு நடத்திவருவது அவர்களின் சொந்த நோக்கங்களுக்கே கேடாக அமைந்து மார்கஸிசம்–லெனினிசம்–மாசேதுங் சிந்தனைகளிலிருந்து மக்களை விலகி ஓடச் செய்கிறது. இவ்வாறாக ஆளும் வர்க்க எதிரிகளின் சாமார்த்தியமான திட்டமும், மாசேதுங் போதனை களைப் பின்பற்றுபவர்கள் என்று சொல்லிக் கொள் பவர்களின் முழுவதும் தவறான அரசியல் வழி முறையும் சம அளவில் ஒன்று சேர்ந்து புரட்சியின் நலன்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் கான செயல்பாட்டுக்கும் ஊறுவிளைவிக்கின்றன. இவர்களின் இந்த செயல்பாடுகள் மக்களை அரசி யலுக்கு எதிரானவர்களாக மாற்றுவதுடன் ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் வளர்ந்தெழும் செயல் முறைப்போக்கை தடுத்துவருகின்றன.

அது மட்டுமல்ல, இம்மாதிரியான பயங்கர வாதச் செயல்கள், ஈவிரக்கமற்ற வன்முறைகள் மார்க்ஸிச–லெனினிசத்தை மதிப்பிழக்கும்படி செய்வது மட்டுமின்றி, ஒடுக்குமுறை முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தங்களது அடக்குமுறை அரசு இயந்திரத்தின் கருவிகளை பலப்படுத்திக் கொள் வதற்கு ஒரு முகாந்திரத்தை வழங்குவதுடன், கொடூர மான சட்டங்களை இயற்றுவதற்கும் இடமளிக்கிறது. மேலும் 'வன்முறையை ஒடுக்குகின்றோம், தீவிரவாதி களை பூண்டோடு அழிக்கிறோம், தேசவிரோத சக்திகளை, பிரிவினை சக்திகளை, கட்டுக்குள் வைக்கிறோம், கலகத்தை ஒடுக்குகிறோம்' என்ற பெயரில் மக்கள் மீது மிக மோசமான அரசு பயங்கர வாதத்தை ஏவிவிடவும் வாய்ப்பாகிவிடுகிறது. இதன் விளைவாக மக்கள் குழப்பத்திற்கும் பயமுறுத் தலுக்கும் ஆட்பட்டு அரசாங்கம் இந்த பயங்கர வாதத்தையும், அராஜகத்தையும் முடிவிற்குக் கொண்டுவந்து தங்களது வாழ்க்கையில் சகஜமான நிலைமையை ஏற்படுத்துவார்கள் என்று நினைத்து பல நேரங்களில் அரசின், அரசாங்கத்தின் ஜனநாயக விரோத ஏதேச்சாதிகாரப் போக்கிற்கு மறைமுகமான ஆதரவாளராக மாறிவிடுகிறார்கள்.

இம்மாதிரியான சாக்குப்போக்குகளை முன் வைப்பதற்கான எந்த பிடிமானமும் அங்கு இருந் திருக்கவில்லையெனில், பூர்ஷுவா அரசும், அரசாங் கமும் கட்டவிழ்த்து விடுகின்ற எதிர்தீவிரவாத நடவடிக்கைகள் தொழிலாளி மக்களிடத்தில் மிகுந்த எதிர்ப்பைக் கிளப்பியிருக்கக்கூடும். இவ்விஷயத்தில் சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்) தலைவர்கள், என்னதான் அவர்களின் நோக்கம் நல்லதாக இருப்பினும் புரட்சியைப் பற்றிய முறையியல் மற்றும் சரியான சித்தாந்தம் பற்றிய அறியாமையின் காரணமாக, முதலாளித்துவம் அரசதிகாரத்தில் இருந்துவருகிறது என்ற உண்மையையும் ஆளும் முதலாளித்துவமே அனைத்துக் கேடுகளுக்கும் ஆணிவேர் என்பதையும் யதார்த்தத்தில் மறைக்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் பூர்ஷுவா வர்க்க நலனுக்கு சேவை செய் கிறார்கள். மேலும் கம்யூனிசத்தை பழிப்பதற்கும் அதற்கெதிரான விஷமப் பிரச்சாரத்தை கட்ட விழ்த்துவிட ஆளும் வர்க்கத்திற்கு இது ஒரு நல்ல வாய்ப்பைக் கொடுப்பதோடு லெனின், ஸ்டாலின், மாவோ, போன்ற மார்க்சிய அத்தாரிட்டிகளை கேலிக்கூத்தாக்க வாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

இரண்டாவதாக, இதில் மிகவும் வேதனை மிகுந்த விஷயம் என்னவெனில், சரியான போதிய அரசியல் விழிப்புணர்வின்றி அநேக இளைஞர்களும் யுவதிகளும் இந்த பிரிவினைவாத–வகுப்புவாத–குறுகிய இனவாத மற்றும் பிற பிரிவினை சக்திகளின் பின்னால் அணிவகுத்து தங்களின் சொந்த சகோதரர் களின் மீதும் பிற சமூகத்தினர் மீதும் துப்பாக்கி குண்டுகளைப் பொழிந்து தங்களின் போராட்ட உத்வேகத்தையும் தைரியத்தையும் வீணடித்து வெறி கொண்ட பகையுணர்விற்கு ஆட்பட்டு தங்களைக் குருடாக்கிக் கொள்கிறார்கள். இவை அனைத்திற்கும் மேலாக மிக நவீனவசதிகள் கொண்ட இராணு வத்தை எதிர்த்துச் சாகசவாத சண்டையிட்டு ஆயிரக் கணக்கில் இவர்களே கொல்லப்படுகிறார்கள்.

இவ்வாறாகவே, நக்சலைட் இயக்கத்தின் நீரோட் டத்திற்குள் கொண்டுவரப்பட்ட இளைஞர்கள் மாணவர்களையே மேம்போக்கான புரட்சிகர உத்வேகமும் துணிச்சலும், பெண்களை மதிக்கும் பண்பும், மலர்ந்தது, அவர்கள் மிக உண்மையாக ஆட்சி அமைப்புமுறையின் மாற்றத்தைப் பற்றி கனவு கண்டார்கள். தங்களது வளமையான எதிர்காலம், பாரம்பரியமான குடும்ப பந்தங்கள் உள்ளிட்ட அனைத்தையும் விட்டுவிடவும் அடக்குமுறை அரசு இயந்திரத்தினை எதிர்த்து தங்களின் மதிப்பு மிக்க உயிரையும்கூட விட்டுவிட அவர்கள் தயங்க வில்லை. இந்த பாரம்பரியம் சி.பி.ஐ (மாவோயிஸ்ட்) இயக்கத்தின் சாகசவாதத்திலும் தொடர்கிறது. இந்த செயல்முறைப்போக்கில், இந்த நாடு துணிச்சல் மிக்க, உன்னதமான, அதாவது ஒரு சரியான புரட்சிகர கட்சியின் தொடர்புக்கு வந்து தங்களை புரட்சியின் கம்பீரமான போர்வீரர்களாக மாற்றிக்கொண்டு புரட்சியின் செயல்முறைப்போக்கை சரியான திசை வழியில் முடுக்கிவிடும் வல்லமை கொண்ட இளைஞர் பட்டாளத்தை இழந்துகொண்டிருக்கிறது. இது புரட்சிகர இயக்கத்திற்கு எவ்வளவு பெரிய இழப்பு பாருங்கள்! ஆகவே தான், உண்மையான மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட்கள், பகைவனின் கூடாரத் திற்குள் நுழைந்து எதிரியின் மீது பீதியை ஏவுவது என்ற அர்த்தத்தில் தனிநபர் பயங்கரவாதம் நெறி யற்றது என்று கண்டிக்கவில்லை. மாறாக தனிநபர் பயங்கரவாதம் புரட்சியின் நலனுக்கு பெருமளவில் தீங்குவிளைவிக்கின்றது என்ற அர்த்தத்திலேயே அதனைக் கண்டிக்கின்றனர்.

### ஜனநாயக வெகுஜன இயக்கங்களின் வளர்ச்சிக்கு உதவாது

மக்களின் நியாயமான ஜனநாயக வெகுஜன இயக்கத்தை அலையலையாக உருவாக்குவதே இத் தருணத்தின் தேவையாக நாம் கருதுகிறோம், இந்த வெகுஜன இயக்கங்கள் சரியான திசைவழியில், சரியான புரட்சிகரத்தலைமையின் கீழ் நடத்தப்படும் போது, அது படிப்படியாக வர்க்கப்போராட்ட நிலைக்கு உயர்த்தப்பட்டு இறுதியாக நாம் முன்பு குறிப்பிட்ட புரட்சிக்கான அகவயப்பட்ட, புறவயப் பட்ட நிலைமைகளை நிறைவுசெய்யும். அவ்வாறு அது முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சியை சாதிப்பதில் முடிந்து நமது லட்சியமான மக்கள் விடுதலையைப் பெற்றுத்தரும். ஆனால் போலி மார்க்சிஸ்ட்டுகள்

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 28th November 2013

புரட்சி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

## நீதித்துறை தனது வரம்பை மீறும்...

# சக்திவாய்ந்த மக்கள் இயக்கமே அரசியலமைப்பு சாசன சர்வாதிகாரத்தை தடுக்கும்

6ம் பக்கம் தொடர்ச்சி

உண்மையான மக்கள் ஆதரவு புரட்சிகர கட்சிகளின் வேட்பாளர்களை விட்டுவிடுவோம், காங்கிரஸ் தலைமையிலான யு.பி.ஏ. அரசாங்கம் தங்களது கூட்டணிக் கட்சிகளாக விளங்கும் சமாஜ் வாடி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர்களுக்கு எதிராக சிபிஐ யைப் பயன்படுத்தி எப்படி அவர்களை மண்டியிடச் செய்தது என்பதை மக்கள் கவனிக்கத் தவறுவார்களா என்ன?

மற்றொரு புறம் சுவரொட்டி ஒட்டுதல், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல் போன்றவற்றிற்கு இடங்களை, பாதைகளைத் தேர்வு செய்வதிலும் நீதிமன்றங்கள் குறிக்கிடுகின்றன. மக்கள் போராட்டங்கள் நடத்தும் போது அவற்றிற்கெதிராக பொது நலவழக்குகள் என்ற பெயரில் வழக்குகள் தொடுக்கப்படுகின்றன. அவற்றிலும் கூட ஜனநாயகம் மக்களுக்கு வழங்கிய போராட்ட உரிமையை பறிக்கின்ற விதத்தில், போராட்டத்தைக் கைவிட உத்தரவிடுவது, மறுத்தால் அது நீதிமன்றத்தையே அவமதிப்பது என்று முத்திரை குத்தப்படுகிறது. இதன்மூலம் மக்களது கருத்தை பாராளுமன்றத்திற்கு வெளியேயான ஒன்றுபட்ட மக்கள் இயக்கங்கள் மூலம் வெளிப்படுத்தும் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டு வருகிறது. இது போன்ற நடவடிக்கையை நீதிமன்றமும் மேற்கொள்வது மிகுந்த அபாயகரமான அறிகுறிகளாகும்.

இந்தத் தீர்ப்புகள் ஆலோசனைகள் உண்மையில் எதைக் காட்டுகின்றன? சட்டமியற்றுவோரின் உரிமையை நீதிமன்றங்கள் கைப்பற்ற அனுமதிப்பது, அல்லது உண்மையில் கைப்பற்றியிருப்பதானது நிறுத்தப்படாவிட்டால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஈடுபாடும் பங்கேற்பும் இல்லாமலேயே சட்டம் இயற்றக்கூடிய அரசியல் சாசன சர்வாதிகாரத்தை அது விரைவில் கொண்டு வந்துவிடும்.

### அரசியல்சாசன சர்வாதிகார அபாயத்தை முறியடிக்க வலுவான இயக்கம் கட்டவேண்டும்

இந்தப் பிரச்சினைகளில் இதுபோன்ற கருத்துக்களைப் பகிர்ந்து இந்நிகழ்வுகளில் பொதிந்துள்ள பெரும் அபாயத்தைப் பற்றி மக்களை விழிப்புணர்வு அடையச் செய்வதில் எமது கட்சியைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் ஆர்வம் காட்டவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்வதை விட்டுவிடுவோம், இவற்றால் விளையப்போகும் அபாயங்களைப் பற்றி அவர்களே கவலைப்படாதது போல் தெரிகிறது. முன்னேற்றம் என்ற பெயரில் நீதித்துறை நடவடிக்கைகளை பாராட்டும் இக்கட்சிகள் அளப்பரிய அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு உதவி செய்து அதன்மூலம் சட்டமியற்றும் மன்றங்களை செயல்படாததாக மாற்றுவதாகத் தெரிகின்றது. பாராளுமன்ற ஜனநாயக முகமூடியை வைத்துக்கொண்டே உண்மையில் சட்டமன்றங்களை காலப்போக்கில் மதிப்பிழக்கச் செய்து சீரழிக்கக்கூடிய அரசியல் சாசன சர்வாதிகாரத்தை தனது நீதித்துறையின் உதவியோடு கொண்டுவருவதென்ற ஆளும் வர்க்கத்தின் திட்டத்திற்கு இந்த கட்சிகள் எல்லாம் சம்மதித்துவிட்டதுபோல் தெரிகிறது.

இந்த அபாயகரப் போக்கை நல்லெண்ணம் கொண்ட சரியாகச்-சிந்திக்கும் மக்கள் சற்று கூர்மையாக கவனிக்கவேண்டும். இதை எதிர்த்துப் போராடுவதற்கு எந்தவொரு பெரிய அரசியல் கட்சியும் மக்களுக்காக வராது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு மாறாக, கிரிமினல்களின் ஆதிக்கம் இல்லாத வகையில் தேர்தல்களை நேர்மையாக நியாயமாக நடத்துவதற்கு உகந்த வகையில் வலிமையான மக்கள் கருத்தையும் ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கத்தையும் வளர்ப்பதே இத்தருணத்தின் தேவையாகும். சட்டமியற்றும் மேல் அதிகாரத்தை நீதிமன்றம் கைப்பற்றும் இந்த அபாயகரமான போக்கை முறியடிக்க வலுவான போராட்ட இயக்கங்களைக் கட்டியெழுப்பாமல் மக்களது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு நீதிமன்றத்தை மட்டுமே நாடியிருப்பது தற்கொலைக்குச் சமமாகிவிடும். இத்தகைய அபாயங்கள் குறித்து மக்களை விழிப்புணர்வடையச் செய்வதற்காக நாட்டின் புரட்சிகரக் கட்சியான எஸ்யுசிஐ. (கம்யூனிஸ்ட்) தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இது திரளான வர்க்க மற்றும் வெகுஜன இயக்கங்களைக் கட்டியெழுப்புவதற்கு விடாப்பிடியாக முயற்சித்து வருகிறது, உருவெடுத்துவரும் பூர்ஷ்வா அரசியல் சாசன சர்வாதிகாரத்திற்கு எதிரான போராட்டமும் அவற்றில் பிரிக்க முடியாத ஒன்றாகும். இதனை கவனத்தில் எடுத்துக்கொண்டு இத்தருணத்திற்கு ஏற்ற வகையில் வெகுண்டெழுமாறு பொது மக்களுக்கு எமது கட்சி அறைகூவல் விடுகிறது.

## தனிநபர் கொலை அடிப்படையிலான அரசியல்...

# சரியான புரட்சிகர கட்சி உதித்தெழுந்து தலைமை தாங்காதவரை புரட்சி நடந்தேறாது

7ம் பக்கம் தொடர்ச்சி

உள்ளிட்ட வாக்கு வங்கி அரசியல் கட்சிகளால் பரப்பப்படும் பாராளுமன்ற மாயையும் பல்வேறுபட்ட வண்ணங்களைக் கொண்ட வகுப்புவாத–குறுகிய இனவாத சக்திகளால் ஏற்படுத்தப்படும் பிரிவினை எண்ணப்போக்குகளும் சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்) இயக்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட வன்முறை மற்றும் தனிநபர் கொலைத் திட்டமும் ஆகிய இவையாவும் புரட்சிக்கான புறயதார்த்த செயல்முறைப்போக்கின் வளர்ச்சியைத் தடைசெய்கின்றன.

நியாயமான கோரிக்கைகளுக்கான விழிப்புணர்வு கொண்ட ஜனநாயக வெகுஜன இயக்கங்களின் எல்லைக்கு வெளியிலிருப்பதும் வெகுஜனங்களின் அரசியல் விழிப்புணர்வு தொடர்ந்து குறைந்து வருவதும் பல்வேறுபட்ட தீங்கான சீர்குலைந்த சிந்தனைகளுக்கு வழிவகுப்பதோடு, பாசிச சக்திகள் தங்களின் பிடியை மக்கள் மீது இறுக்கவும் இடமளிக்கின்றன. பயபீதிக்கு ஆட்பட்ட மக்களை புரட்சிகரப் போராட்டத்திற்கான நியாயமான ஜனநாயக இயக்கப் பாதைக்கு மீண்டும் கொண்டுவருவது மிகுந்த சிரமமான காரியமாகிறது. அதே சமயம் ஆளும் வர்க்கத்தின் கட்சிகள் இந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி மார்க்சிசம்–லெனினிசம் அவர்களின் நலனுக்கு விரோதமானது என்றும் நம்பவைக்கிறார்கள், வேறுவழியின்றி மக்களுக்கு தேர்தல் மட்டுமே கதியாகிறது. பலதரப்பட்ட அரசியல் கட்சிகள் இருப்பது ஒரு தொல்லை தரக்கூடியது, இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கக்கூடியது, சுயநலக்காரர்கள் கிரிமினல்கள் மற்றும் வன்முறையைத் தூண்டுகிறவர்களின் தொழில், ஆதலால் அதிலிருந்து அவர்கள் ஒதுங்கியிருக்க வேண்டும் என்று ஆளும் வர்க்கத்தின் சக்திவாய்ந்த பிரச்சார கருவிகள் ஒரு பிம்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

### மக்கள் உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும்

இன்னலுற்றுவரும் மக்கள், பாராளுமன்ற வாதமோ அல்லது பிரிவினை எண்ணப்போக்கிற்கு கண்மூடித்தனமான ஆதரவாளர்களாக மாறுவது அல்லது ஒன்றுக்கும் உதவாத வன்முறைகளில் ஈடுபடுவதோ எவ்வித நிவாரணத்தையும் பெற்றுத் தராது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர்களின் முன் இருக்கின்ற ஒரே மாற்றுவழி, சரியான புரட்சிகர தலைமையின் கீழ் உயர்ந்த பாட்டாளிவர்க்கக் கலாச்சாரம் மற்றும் தார்மீக நெறிமுறைகளின் அடிப்படையில் தொடர்ந்த தீரமிக்க ஜனநாயக வெகுஜன இயக்கங்களை கட்டியெழுப்பும் பாதையை தேர்ந்தெடுப்பதுதான். மார்க்சிசம்–லெனினிசம் அல்லாத எந்த சித்தாந்தமும் அவர்களுக்கு வழிகாட்டமுடியாது. தங்களை மார்க்ஸிஸ்ட்–லெனினிஸ்ட் என்று அழைத்துக் கொள்ளும் ஓட்டுக்குக் கையேந்தும் சமூக ஜனநாயக சக்திகளோ அல்லது தங்களை 'மாவோயிஸ்ட்' என்று அழைத்துக்கொண்டு குழப்பமடைந்து, திசைதிருப்பப்பட்டு, அதீத சாகசவாதிகளாக இருக்கக்கூடியவர்களோ மார்க்சிச–லெனிசத்தின் சரியான புரட்சிகர அரசியல் வழியைக் காட்டமுடியாது.

மார்க்ஸ்–ஏங்கல்ஸ் துவங்கி லெனின், ஸ்டாலின், மாவோ, சிப்தாஸ்கோஷ் வரை அனைவரும் இந்த இரண்டு பாதைவிலகல்கள் குறித்தும் அதன் பல்வேறு துணைக் கூறுகள் குறித்தும் மிகுந்த எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதைப்போலவே, பிளவுவாத–வகுப்புவாத–குறுகிய இனவாத கிளர்ச்சிகள், சகோதர பகைமோதல்கள் மற்றும் வகுப்புவாத தனிநபர் கொலைகள் ஆகியவற்றை ஜனநாயக இயக்கங்கள் என்று கருதி குழப்பமடையக் கூடாது. மக்கள் இயக்கம் எப்பொழுதுமே இம்மாதிரியான சக்திகளின் பிடியில் அகப்பட்டுவிடக் கூடாது என்பது இங்கே மிக முக்கியமான விஷயம். அவ்வாறு அகப்பட்டால் அது திசையிழந்து ஒன்று மற்றதாக வடிந்துபோகும்.

மக்களின் எரியும் பிரச்சினைகளுக்கான ஜனநாயக இயக்கங்களின் அலையலையான வளர்ச்சிப் போக்கின் ஊடே தொடர்ச்சியான சித்தாந்த பிரச்சாரத்தின் மூலமாக பிரதான வகுப்புவாத மற்றும் குறுகிய இனவாத பிளவுவாத சக்திகளுக்கு ஒரு பலமான தோல்வியை கொடுக்கவேண்டும். இதே செயல்முறைப்போக்கில் வாக்குவங்கி அரசியல் நடத்தும் போலி மார்க்சிஸ்டுகளும் கூட மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட வேண்டும். மேலும் சி.பி.ஐ.(மாவேயிஸ்ட்)யின் தவறான அடிப்படை அரசியல் பாதை மக்களிடம் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

தோழர் சிப்தாஸ்கோஷ் அவர்களின் வரலாற்று ரீதியிலான சில கணிப்புகளை இங்கே இறுதியாக முன் வைத்து முடிக்கிறோம். "வெளித்தோற்றத்திற்கு இங்கே அரசியலில் பல எதிரெதிரான சக்திகள் இருப்பதைப்போன்று தோன்றினாலும்கூட... இறுதிக்கட்ட போராட்டம் என்ற அளவுகோலைக் கொண்டு இச்சூழ்நிலையை உற்றுநோக்கினால் அரசியலில் இரண்டு எதிர் எதிர் சக்திகளே இருக்கின்றன என்று கருதுகிறேன். அவை என்னமாதிரியான பெயர்களில் தோற்றமளித்தாலும் அதில் ஒன்று புரட்சிக்கானது மற்றவை புரட்சிக்கெதிரானது. ஒன்று புரட்சியை எதிர்க்கும் அரசியல் ....மற்றொன்று புரட்சியை அனிதிரட்டும் அரசியல்" (*தேர்வு நூல் தொகுதி 3, பக்கம் 532–33*).

"கம்யூனிசம் மற்றும் புரட்சியின் உன்னத அடையாளமான செங்கொடியின் மேன்மையை உயர்த்திப்பிடிக்கவும் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லவும்..... நீண்ட நெடிய விடாப்பிடியான போராட்டத்தின் வழியாக கம்யூனிஸ்ட் கட்சிக்குரிய அனைத்து தகுதியோடும் எஸ்.யு.சி.ஐ.(கம்யூனிஸ்ட்) உதித்திருக்கிறது." தேர்வு நூல் தொகுதி *2, பக்கம் 278)*

"தொழிலாளர், விவசாயிகள் மற்றும் அனைத்து சுரண்டப்படும் வெகுஜனங்களின் அதிருப்தியிலிருந்து மீண்டும் மீண்டும் புரட்சி அலைக்குப்பின் அலையாக திரண்டெழுந்து முன்னேற எத்தனிக்கும் பின் அலைக்குப் பின் அலையாக அது தணிந்துபோக முயற்சிக்கும் சமுதாயத்திற்குள் நிலவும் முரண்பாடுகள் இந்த சமூக ஒழுங்கை புரட்சிகரமாக மாற்றியமைக்க அறைகூவல் விடுத்து பன்மடங்கு ஆழமாகும், மேலும் மேலும் கூர்மையாகும், அது நம் விழிப்புணர்வை வேண்டிநிற்கும். அது மனித சமுதாயத்திற்கு புரட்சி அவசியம் என்று வேண்டுகோள் விடுக்கும். இருப்பினும் கூட புரட்சி வராது. மீண்டும் மீண்டும் பிற்போக்கு வலிமைபெறும் புரட்சிகரக் கட்சி புரட்சியை வழிநடத்த போதிய வலிமையுடன் உதித்தெழும்வரை புரட்சி முகம் காட்டாது." (*தேர்வு நூல் தொகுதி 3, பக்கம் 390–391*).

சமுதாயத்தின் இந்த உருக்கமான வேண்டுகோளுக்கு செவிமடுக்கும்படியாக நாம் அனைவரையும் அழைக்கிறோம் இந்தியப்புரட்சிக்கு வழி வகுக்கும் வர்க்க வெகுஜனப் போராட்டங்களை உக்கிரப்படுத்தும் எஸ்யுசிஐ. (கம்யூனிஸ்ட்) கட்சியின் பதாகையை உயர்த்திப்பிடிப்பீர்!

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in